தர்மசக்கரம்



ரக்தாக்ஷி ௵ பங்குனி ௴ சக்கரம் 34 ஆரம் 3

ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்

திருப்பராய்த்துறை-639 115 திருச்சி ஜில்லா

சந்தாதாரர்களுக்கு அறிவிப்பு

இம்மாதம் முதல் தர்ம சக்கரம் 40 பக்கங்களுக்குப் பதிலாக 32 பக்கங்களுடன் வெளி வருகிறது. சந்தாவை உயர்த்தாமல் தர்ம சக்கரத்தை நஷ்டமில்லாமல் நடாத்துதற்கு இதைத் தவிர வேறு வழியில்லை. பேப்பர் விலை சமாளிக்க முடியாத பாங்கில் அதிகரித்துள்ளது. அதனால் இந்த ஆண்டு தர்ம சக்கரத்திற்குச் சுமார் ரூ. 25 ஆயிரம் செலவு கூடுகிறது. அதை ஈடு செய்வதற்காக எட்டுப் பக்கங்கள் குறைக்கப்பட்டுள்ளன. சந்தாதாரர்கள் இதை அன்புடன் ஏற்றுக்கொள்வார்களாக.

DHARMA CHAKRAM

Statement about ownership and other particulars about Newspaper 'Dharma Chakram' to be published in the first issue every year after the last day of February.

FORM IV

(See Rule 8)

1. Place of Publication	Tirupparaitturai
2. Periodicity of the Publication	Monthly
3. Printer's name: Nationality: Address:	Swami Sankarananda Indian Tapovanam Printing School, Tirupparaitturai 639 115, Tiruchi Dt.
4. Publisher's name: Nationality: Address:	Swami Sankarananda Indian Sri Ramakrishna Tapovanam, Tirupparaitturai-639115, Tiruchi Dt.
5. Editor's name: Nationality: Address:	Swami Nithyananda Indian Sri Ramakrishna Tapovanam, Tirupparaitturai-639115, Tiruchi Dt.
6. Names and addresses of individuals who own the newspaper and partners or shareholders holding more than one percent of the total capital:	Sri Ramakrishna Tapovanam, Tirupparaitturai 639 115, Tiruchi Dt

I, Sankarananda, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

Sankarananda
Signature of the publisher.

Date 14—3—85.

தர்ம சக்கரம்

மாத சஞ்சிகை

சக்கரம் 34	ரக்தாக்ஷி ஸூ பங்குனி மீ	ஆரம் 3

பொருளடக்கம்

சந்தா விவரம்

டிபாஸிட் சந்தா : ரூ. 150 அனுப்பி இங்கு டிபாஸிட் செய்துவிட்டால் டிபாஸிட் இங்கு இருக்கும்வரையில் மாதந்தோறும் தர்ம சக்கரம் பத்திரிகை தங்களுக்கு வந்து கொண்டிருக்கும். ஆண்டுதோறும் சந்தா செலுத்திப் புதுப்பிக்கவேண்டியதில்லை. பத்திரிகைவேண்டாம் என்று கருதும்பொழுது டிபாஸிட் செய்த ரூபாய் நூற்றைம்பதையும் திரும்பப் பெற்றுக்கொள்ளலாம். இந்தத் திட்டம் உள்நாட்டுக்கு மட்டும் உரியது.

ஆண்டு சந்தா : ரூ. 15 செலுத்தியது முதல் அல்லது அடுத்த மாதம் முதல் பன்னிரண்டு மாதங்களுக்கு ஒவ்வொரு தமிழ் மாதமும் முதல் தேதியில் கிடைக்கும்படி பத்திரிகை அனுப்பப்படுகிறது.

சகாய சந்தா : மாத வருவாய் ரூ. 200 அல்லது ஆண்டு வருவாய் ரூ. 2400க்கும் குறைவாக உள்ளவர்கள் ஆண்டு சந்தா பதினைந்து செலுத்த இயலாது இருந்தால் ரூபாய் பத்து அனுப்பலாம். பாக்கி ரூபாய் ஐந்தைப் பாண்டிச்சேரி S. விஸ்வநாதன் 'தர்ம சக்கர உதவிநிதி' யினின்று ஈடு செய்துகொள்கிறோம். தெய்விக விஷயமாதலால் ரூ. 15 செலுத்த இயலுகிறவர்கள் இந்தச் சலுகையைப் பயன்படுத்தவேண்டாம்.

தமிழ் நாட்டிலும் பாண்டிச்சேரியிலும் உள்ள அரசாங்கப் பொது நூலகங்கள் அனைத்துக்கும் தர்ம சக்கரம் அன்பர்களின் உதவியால் தொடர்ந்து அனுப்பப்பெறுகிறது. நூலக நிர்வாகியிடம் கேட்டுப் பெற்றுப் படித்துப் பயனடையக் கோருகிறோம்.

உள்நாடு தனி இதழ் ரூ. 1-50 வெளிநாடு தனி இதழ் ரூ. 4-00

உள்நாடு வருட சந்தா: ரூ. 15-00 வெளிநாடு வருட சந்தா: ரூ. 45-00

அந்தர்யோக விவரங்கள்

இராமநாதபுரம் ஜில்லா—பள்ளத்தூரில் 24—3—85 ஞாயிற்றுக்கிழமை

இடம்: ஸ்ரீ சாராதா சேவாஸ்ரமம்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி துருவானந்தர்

பவானி வட்டம்—பாலம்பாளையத்தில் 31—3—85 ஞாயிற்றுக்கிழமை

இடம்: பாலம்பாளையம், பாலகிரி பாலமுருகன் கோவில்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி துருவானந்தர்

மதுரை ஜில்லா—காமயகவுண்டன்பட்டியில் 6—4—85 சனிக்கிழமை

இடம்: பாட்டய்யா கோயில் காமதேனு மண்டபம்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

மதுரை ஜில்லா—திருவேடகத்தில் 7—4—85 ஞாயிற்றுக்கிழமை

இடம்: ஸ்ரீ விவேகானந்த கல்லூரி
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள்
உணவு வசதி: நேரில் பகல் உணவுக்கு ரூ. 2-00ம், மாலைச் சிற்றுண்டிக்கு ரூ. 1-50ம் செலுத்திச் சீட்டுப் பெற்றுக்கொள்ளலாம்.

திருநெல்வேலி ஜில்லா—உடையாம்புளியில் 7—4—85 ஞாயிறு

இடம்: அருள்மிகு ஸ்ரீ முப்பிடாதி அம்மன்கோவில்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி திவ்யானந்தர்

சேலம் ஜில்லா—சேந்தமங்கலத்தில் 9—4—85 செவ்வாய்க்கிழமை

இடம்: கன்னிகா பரமேஸ்வரி அம்மன் கல்யாண மண்டபம்
நேரம்: காலை 10-00 மணி முதல் மாலை 4-30 மணி வரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

நீலகிரி ஜில்லா—குன்னூரில் 12—4—85 வெள்ளிக்கிழமை

இடம்: குன்னூர், மவுண்ட், பிளசண்ட் ஹிந்து வித்யாலயாபள்ளி
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

பெரியார் மாவட்டம்—பவானியில் 13—4—85 சனிக்கிழமை

இடம்: ஸ்ரீ ஐயப்ப சேவாமிஷன், ஸ்ரீ சங்கமேஸ்வரர் கோவில் சமீபம்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணி வரை
நடத்துபவர்: ஸ்ரீத் மசுவாமி நித்தியானந்தர்
உணவு வசதி: அன்று காலை 10-00 மணிக்குள் நேரில் சீட்டுப் பெற்றுக்கொள்ளலாம்.

சேலம் ஜில்லா—வனவாசியில் 14—4—85 ஞாயிற்றுக்கிழமை

இடம்: ஸ்ரீ ராமகிருஷ்ண—விவேகானந்த தவ இல்லம்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

प्रज्ञानं ब्रह्म

தர்ம சக்கரம்

அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க்(கு) அல்லால்
பிறவாழி நீந்தல் அரிது.

சக்கரம் 34 | ரக்தாக்ஷி ௵ பங்குனி ௴ | ஆரம் 3

பிரார்த்தனை

मन्नाथः श्रीजगन्नाथो मद्गुरुः श्रीजगद्गुरुः ।
मदात्मा सर्वभूतात्मा तस्मै श्रीगुरवे नमः ॥

— गुरुस्तोत्रं

மன்னாத: ஸ்ரீ ஜகன்னாதோ மத்குரு: ஸ்ரீ ஜகத்குரு: ।
மதாத்மா ஸர்வபூதாத்மா தஸ்மை ஸ்ரீ குரவே நம: ॥

— குருஸ்தோத்ரம்

அண்டத்துக்குத் தலைவராக இருப்பவர் எனக்கும் தலைவர். அண்டத்துக்கு வழிகாட்டுபவர் எனக்கும் வழிகாட்டுகிறார். அனைத்துயிர்களிடத்தும் இருக்கும் பரம்பொருள் என்னிடத்தும் இருக்கிறார். அவருக்கு என் வணக்கங்கள்.

ஞான கருணாகர முகம் கண்ட போதிலே
நவநாத சித்தர்களும் உன்
நட்பினை விரும்புவார்; சுகர், வாமதேவர் முதல்
ஞானிகளும் உனை மெச்சுவார்;
வானகமும் மண்ணகமும் வந்து எதிர்வணங்கிடும் உன்
மகிமையது சொல்ல எளிதோ?
மந்த்ரகுருவே யோக தந்த்ர குருவே மூலன்
மரபில் வரு மௌன குருவே.

— தாயுமானவர்

அருள் விருந்து

பிறரை மதிப்புப் போடுவதில் அவசரப்படாதே.

அருளாளன் யாண்டும் அருள் நிறைந்தவனுகவே இருக்கிறுன்.

நான் மற்றவர்களுக்கு மிக்கான் என்னும் உபாதி பொல்லாதது.

பிறரிடமிருக்கும் நலத்தை மட்டும் நல்லான் ஒருவன் காண்கிறுன்.

அருள்தாகம் வலுப்பதற்கேற்ப சாதகன் அருளுக்குப் பக்கத்தில் வந்துள்ளான்.

மக்களுக்குப் பணிவிடை பண்ணுபவனே ஆண்டவனுக்குத் தொண்டனுகின்றுன்.

யாண்டும் நிலேத்துள்ளது பரவஸ்து. அது எடுக்கும் நாமரூபங்கள் நிலேயற்றனவாம்.

உலகப்பற்றுக் குறைவதற்கேற்ப மனிதன் பரபோதத்திற்குத் தகுதி உடையவன் ஆகிறுன்.

மனிதனுடைய சொரூபம் முழுதையும் நலன் உடையதாக மாற்றவல்லது சமய அனுஷ்டானம்.

நலன் தரும் கோட்பாடு ஒன்று மக்கள் தரும் ஆதரவை முன்னிட்டன்று. அது தன்மயமானது.

வாழ விரும்புகிறவன் விஷத்தை விலக்குவது போன்று சான்றேன் ஒருவன் தீமைகளேத் தவிர்க்கிறுன்.

தன்னேத் திருத்தியமைத்துக்கொள்ள இயலாதவன் உலகம் கெட்டுப்போய் விட்டது என்று குறை கூறுகிறுன்.

திரிகரணங்களேக் கொண்டு பிறருக்குத் தீங்கு செய்யாதே; அவர்களும் தெய்வ சொரூபம் என்பதை மறவாதே.

தன் தாயின் பாதத்தைப் பக்திபூர்வமாகத் தொட்டு வணங்குபவன் பரலோகத்துக்குத் தகுதியுடையவன் ஆகிறுன்.

கடல் தணிந்திருப்பதால் நதிகளனைத்தையும் அது வாங்கிக்கொள்கிறது. அங்ஙனம் அகங்காரமற்றவன் உலகனைத்தையும் தன் மயமாகக் கருதுகிறுன்.

பரமஹம்சர் புகட்டிய

பெருநெறி விளக்கம்

பரமஹம்சதேவர் தொடர்ந்து உரையாடிக் கொண்டிருக்கிறார்.

''ஒரு வீட்டுக்குத் தலைவன் விருந்து கொடுக்கிறான் என்று வைத்துக்கொள்வோம். அவ் வீட்டு உக்கிராணத்துக்குப் பொருத்தமான நிர்வாகி ஒருவனை அவன் அமைத்து வைத்து இருக்கிறான். அம்மனிதன் தன் கடமைகளைச் சரியாக நிறைவேற்றிக்கொண்டு இருக்கும் வரையில் வீட்டுக்குத் தலைவன் அதைப்பற்றிக் கவலை ஒன்றும் கொள்வதில்லை. ஆனால் திடீரென்று உக்கிராணக்காரன் தன் வேலையை விட்டுப் பிரிந்து போகின்ற அவசியம் உண்டாகின்றது. அப்பொழுது வீட்டுத் தலைவன் உக்கிராணத்தைப் பூட்டி விட்டுச் சாவியைத் தன் கைவசத்தில் வைத்துக் கொள்கிறான்.

''இன்னும் வயது வராத சிறுவன் ஒருவனுக்காகவென்றே காப்பாளன் நியமிக்கப்படுகிறான். சிறுவன் ஒருவன் தனக்கு அமைந்துள்ள செல்வத்தை முறையாகக் காப்பாற்ற மாட்டான். ஆகையினால் தான் காப்பாளன் ஒருவன் அரசாங்கத்தால் நியமிக்கப்படுகிறான். அதே விதத்தில் நம்முடைய அகங்காரத்தை ஒதுக்கித் தள்ளும் வரையில் இறைவன் நம்மைப் பற்றிய பொறுப்பை ஏற்றுக்கொள்ளுதல் இல்லை.''

''ஒரு தடவை வைகுண்டத்தில் லக்ஷ்மிதேவியும் ஸ்ரீமந் நாராயணனும் வீற்றிருந்தனர். லக்ஷ்மிதேவி நாராயணனுடைய பாதங்களை வருடிக்கொண்டிருந்தாள். ஸ்ரீமந் நாராயணனே திடீரென்று எழுந்திருந்து, அவசரமாக வெளியே போனார். பிரபோ! தாங்கள் எங்கே போகிறீர்கள்? என்று லக்ஷ்மி தேவி வினயத்துடன் வினவினாள். என் பக்தன் ஒருவன் ஆபத்தில் அகப்பட்டுக் கொண்டிருக்கிறான். அவனைக் காப்பாற்றப் போகின்றேன் என்று சொல்லிக்கொண்டு மஹாவிஷ்ணு வைகுண்டத்திலிருந்து மறைந்து போனார். ஆனால் சிறிது நேரத்திற்குள் திடீரென்று திரும்பி வந்தார். லக்ஷ்மிதேவியோ 'பிரபோ! அவ்வளவு விரைவில் தாங்கள் சென்ற காரியத்தை நிறைவேற்றி விட்டீர்களா? என்று கேட்டாள். அதற்கு ஸ்ரீமந் நாராயணன் கொடுத்த விடையாவது: வண்ணார் சிலர் தாங்கள் துவைத்த வஸ்திரங்களைப் புல்தரையின் மீது காயப் போட்டு இருந்தனர். என் பக்தன் என்னையே நினைத்துக்கொண்டு தான் செய்த குற்றத்தையும் கருத்தில் வாங்காது நடந்து சென்றான். அவனைப் புடைக்க வண்ணார்கள் தடிகளைக் கையில் ஏந்திக்கொண்டு ஓடி வந்தார்கள். இன்னும் என்னைப் பற்றிய சிந்தனையிலே ஊறியவனாகப் பக்தன் ஓட்டம் பிடித்தான். ஆனால் சிறிது நேரத்திற்குள் தம் கையில் அகப்பட்ட கல் ஒன்றை எடுத்து அவர்களைத் திருப்பி அடிக்க முயன்றான். அக்காட்சியைப் பார்த்ததும் எனக்கு அங்கு வேலை இல்லை என்று நான் திரும்பி வந்து விட்டேன் என்று மறுமொழி கூறினார். இக்கூற்றைக் கேட்ட அன்பர்கள் அனைவரும் நகைத்தார்கள்.''

''உம்முடைய அகங்காரத்தை ஒதுக்கித் தள்ள வேண்டும் என்று நான் கேசவசந்திர சேனரிடம் தெரிவித்தேன். அதற்கு விடையாக அவர் 'நான் அகங்காரத்தை விட்டொழித்தால் நான் நடாத்தி வருகின்ற பிரம்மசமாஜம் என்னும் இயக்கம் எங்ஙனம் நடைபெறும், என்று இயம்பினார். அதற்கு விடையாக நான் அவரிடம் இயம்பியதாவது: 'நீவிர் தத்துவத்தை அறிந்துகொள்ளுதலில் பின்னணியில் இருக்கின்றீர். நான் உங்களிடம் உங்கள் இயக்கத்தை நிறுத்திவிட வேண்டுமென்று சொல்லவில்லை. அகங்காரத்தில் இரண்டு கூறுகள் உள. அவை பண்பாடடையாத அகங்காரம், பழுத்துப் பண்பாடடைந்துள்ள அகங்காரம் என்பனவாம். இவ்வ இரண்டினுள் பண்பாடு அடையாதது பந்தபாசத்தை உண்டுபண்ணுகிறது. காமத்தையும், காசு ஆசையையும் வளர்க்கக்கூடியதாகவே அது இருக்கிறது. மற்று, பழுத்த அகங்காரமோ மனிதன் தொடுத்துள்ள நல்ல கிருத்தியங்களை நிறுத்திவிடுவதில்லை. அக்கிருத்தியங்களுக்குத் தன்னைக் கர்த்தாவாக வைத்துக்கொள்ளும் எண்

ணத்தை மட்டுமே துறந்து விடுதல் வேண்டும். நான் ஈசனுடைய குழந்தை என்றும் நான் ஈசனுடைய கிருத்தியத்தையே அவன் கையில் கருவியாயிருந்துகொண்டு ஆற்றி வருகிறேன் என்றும் கருதுதல் வேண்டும். நலன் அனைத்தும் அத்தகைய தூய மனப்பான்மையிலிருந்து அவனுக்கு வந்து அமைகின்றன.''

''மானுடன் ஒருவன் தன்னை ஈசனுடைய பக்தனாகவோ தொண்டனாகவோ வைத்துக் கொள்ளுதல் உசிதம். அதில் கேடு ஏதுமில்லை.''

திரைலோக்யர்: ''ஏதோ கொஞ்சம் சாதனத்தில் ஈடுபடுகிற ஒருவன் தான் அகங்காரத்தை விட்டு ஒழித்ததாக எண்ணிக்கொள்கிறான். அப்படி எண்ணுவது சுலபம். ஆனால் எண்ணுவது போன்று அகங்காரத்தை விட்டொழிப்பது அவ்வளவு சுலபமானது அன்று.''

பரமஹம்சதேவர்; ''ஆம். நீ சொல்வது உண்மையே. அகங்காரத்தை விட்டொழித்தல் பொருட்டுக் கௌரி 'நான்' என்னும் பதத்தை உபயோகிப்பதில்லை. அதற்குப் பதிலாகத் தன்னைப்பற்றிப் பேசும்பொழுதெல்லாம் 'இது' என்று இயம்புவது அவனுடைய வழக்கமாய் இருந்து வந்தது. அதைக் கவனித்து வந்த நானும் அவன் முறையைக் கையாண்டேன். நான் சாப்பிட்டாய்விட்டது என்று சொல்வதற்குப் பதிலாக 'இது சாப்பிட்டாய்விட்டது' என்று சொன்னேன். இதைக் கவனித்து வந்த மதுரநாத் விசுவாசர் இதற்கு ஆக்ஷேபனை தெரிவித்தார். அவர் சொன்னதாவது: 'ஐயனே! அகங்காரத்தை விட்டொழிக்க இயலாத மக்கள் இந்தப் பாங்கில் பேசிக்கொண்டு இருக்கட்டும். தங்களிடத்திலிருந்து அகங்காரம் அறவே அற்றுப் போயிற்று. ஆதலால் 'நான்' என்னும் பதத்தைக் கையாளுதலால், தங்களிடம் தோஷம் ஏதும் வந்துவிடாது. ஆதலால் அன்னவர்கள் பேசுவது போன்று நீங்களும் பேச வேண்டியதவசியமில்லை.'

''கேசவ சந்திரசேனருக்கு நான் இங்ஙனம் பகர்ந்தேன். ''அகங்காரத்தை அடியோடு ஒதுக்கித் தள்ள இயலவில்லையென்றால் அது இறைவனுடைய தொண்டன் என்னும் பான்மை படைத்த அகங்காரமாக இருந்து கொள்ளட்டும். பிரஹலாதனிடம் இரண்டுவித மன நிலைகள் இருந்தன. சில வேளைகளில் அகங்காரம் அவனை விட்டு அறவே அகன்று போய்விடும். அவ்வேளைகளில் பரமாத்மா வேறு தான் வேறு என்னும் பேத புத்தி அவனுடைய உள்ளத்தில் உருவெடுப்பதில்லை. ஆதலால் பரமாத்ம சொரூபமே அந்த வடிவத்தில் இலங்குவதாயிற்று. அத்தகைய நிலை அவனுக்கு வாய்க்கின்றபொழுது நான் வேறு இறைவன் வேறு அல்ல. இறைவன் தானே என் வடிவத்தில் இலங்குகின்றார் என்றும் இயம்புவான். ஆனால் தன் சொந்த வியக்தி எப்பொழுதெல்லாம் தோன்றியதோ அப்பொழுதெல்லாம் அவன் இறைவனுடைய தொண்டன் என்று இயம்புவான். 'ஸோஹம்' பாவனையில் உறுதி பெற்றான பிறகு மனிதன் ஒருவன் உலகிலே இறைவனுடைய தொண்டனாக வாழ்ந்திருக்கலாம். அந்நிலையிலிருக்கும் அவன் கடவுள் தன்னைக் கருவியாக வைத்துக் கொண்டு காரியங்களை நிறைவேற்றுகிறார் என்று உணர்தல் வேண்டும்.''

சேனாதிபதியிடம் பரமஹம்சதேவர் பகர்ந்ததாவது: ''சாதகன் ஒருவன் பிரம்மஞானம் அடையப்பெறுகிற பொழுது சில அறிகுறிகள் அவனிடத்துத் தென்படுகின்றன. சில வேளைகளில் ஐந்து வயது பாலகன் போன்று அவன் நடந்து கொள்வான். வேறு சில வேளைகளில் பித்துப் பிடித்தவன் போன்று தென்படுவான். இன்னும் சில வேளைகளில் உணர்ச்சியில்லாத ஜடவஸ்து போன்று தென்படுவான். இன்னும் சில வேளைகளில் ஏதோ பேயோ பிசாசோ பிடித்துக் கொண்டவன் போன்று தென்படுவான். இத்தகைய அதீத நிலையை அடையப் பெற்றிருக்கும் பொழுது அன்னவன் உலக காரியங்களுக்கு உதவமாட்டான். ஜனக மகாராஜா போன்ற ஞானிகள் உலகக் கிருத்தியங்களை வேண்டியவாறெல்லாம் செய்து சாதித்தனர் என்று நீவிர் இயம்பலாம். பழங்காலத்தில் வாழ்ந்திருந்தவர்களுள் பலர் பொறுப்பு மிகப் படைத்திருந்தனர். ஆதலால் பெரிய ஸ்தானத்தில் இருந்த ஒருவன் தன் கடமைகளையெல்லாம் தன் சிப்பந்தியிடம் ஒப்படைத்துவிட்டு ஆத்ம சாதனத்தில் தீவிரமாக ஈடுபட்டான். கவலையற்று அவன் தீவிரமாக ஆத்மசாதனத்தில் இறங்கினான். மேலும் பழங்காலத்து மக்களுள் பலர் ஈசுவர விசுவா

சம் ஏராளமாகப் படைத்திருந்தனர்.''

"சாதனத்தில் முன்னேற விரும்புகிறவர்கள் கர்மபலத்தியாகம் செய்யவேண்டும் என்று பரமஹம்சதேவர் வற்புறுத்தினார். ஆனால் சாதகன் ஒருவன் தான் சாதிக்க வேண்டிய கடமைகள் சில உள என்னும் எண்ணத்தில் ஊறியிருக்கின்றவன் தடையின்றித் தன் கடமையை நிறைவேற்றலாம். அதற்கிடையில் தான் முற்றிலும் பற்றற்றவனாயிருத்தல் வேண்டும்."

பரமஹம்சதேவர்: "ஞானம் அடையப்பெற்ற ஒருவன் பற்றுடைய மற்றவனைப் போன்று ஓடி ஓடி வேலை செய்வதில்லை. இன்றியமையாத ஏதோ சில கிருத்தியங்களை மட்டும் உதாசீனன் போன்று இருந்துகொண்டு அவன் நிறைவேற்றுகின்றான்.

திரைலோக்கியர்: "ஞானம் முதிர முதிரக் கர்மம் தானே குறைகிறது என்று சொன்னீர்களே! பவஹாரிபாபா ஞானத்தில் குறைந்தவர் அல்லர். அப்படியிருந்தும் பொது மக்களுடைய வியவஹாரங்களைத் தீர்த்து வைப்பதில் அவர் தீவிரமாக ஈடுபட்டிருந்தார். சில வேளைகளில் நீதிமன்றத்து விவகாரங்களில் கூட அவர் கருத்துச் செலுத்தி வந்தார் அல்லவா?"

பரம்ஹம்சதேவர்: "ஆம், ஆம். நீ சொல்வது முற்றிலும் மெய். டாக்டர் துர்க்காசரண் பெரிய குடிகாரனாக இருந்தார். அல்லும் பகலும் குடிவெறியிலேயே அவர் உழன்று வந்தார். அதற்கிடையில் அவர் கடமையில் சிறிதேனும் பிசகாது இருந்தார். நோயாளிகளை ஒழுங்காகக் கவனித்து வந்தார். அப்படி அவர் செய்துவந்த கடமையில் இம்மியளவும் பிசகவில்லை. பக்தியோ ஞானமோ சாதகன் ஒருவனிடத்து மேல் நிலைக்கு வந்திருக்குமாகில் அன்னவன் தான் புரியும் கடமையிலிருந்து பிசகுவதில்லை. ஆனால் இத்தகைமை ஆத்ம சாதகர்கள் எல்லார்க்கும் வருவதில்லை. தவம் புரிவதில் மேலே போயிருக்கும் சாதகன் ஒருவனுக்கு இத்தகைய ஆற்றல் தெய்வாதீனமாக வந்தமைகிறது.

"இறைவனே! பிரபஞ்ச கிருத்தியங்களனைத்தையும் நிறைவேற்றி வருகின்றார். ஜீவர்கள் அனைவரும் இறைவன் கையில் கருவிகள் மாத்திரமாக அமைந்திருக்கிறார்கள். காளிகா தேவியின் சந்நிதியில் வைத்துச் சீக்கிய பக்தர்கள் சிலர் என்னிடம் கடவுள் கருணையே வடிவெடுத்துள்ளவர் என்று இயம்பினார்கள். யாரிடத்து அவர் கருணையே வடிவெடுத்தவராகவிருக்கிறார் என்று நான் அவர்களிடம் கேட்டேன். ஏன் ஐயனே! அவரால் சிருஷ்டிக்கப்பட்டுள்ள நம் எல்லாரிடத்திலும் அவர் கருணையே வடிவெடுத்தவராக இருக்கிறார் என்று அவர்கள் சொன்னார்கள். நாம் அனைவரும் அவருடைய குழந்தைகள் என்பதில் ஐயமில்லை. தந்தை ஒருவன் தன் குழந்தைகளிடத்துக் கருணை வைத்திருப்பதை நாம் சிலாகித்துப் பேசுவது எதற்காக? தந்தை தன் செல்வர்களிடத்து அன்பு வைத்திருப்பது இயல்பு தானே. தந்தை ஒருவன் தன் மக்களைப் பராமரித்து வரக் கடமைப்பட்டிருக்கிறான். அப்படியல்லாது மக்களைப் பெற்றெடுத்தவன் ஒருவன் இருக்க அயலார்கள் அம் மக்களைப் பேணி வரவேண்டும் என்று எதிர் பார்ப்பது முறையாகுமா? கடவுள் நம்மிடத்துச் கருணை வைத்திருக்கிறார் என்று எண்ணிப் பாராது இயம்புகின்றவர்கள் ஓர் உண்மையை அறவே மறந்திருக்கிறார்கள். நாம் அனைவரும் கடவுளின் குழந்தைகள். அவரன்றி வேறுயாரும் நமக்கு உற்றார் உறவினர் ஆக மாட்டார்கள் என்னும் உண்மையை மறந்திருப்பதால் இத்தகைய பொருள் சேராத புகழ்ச்சியைக் கடவுள்மீது பொழிகின்றனர்."

சேனாதிபதி: "தாங்கள் இயம்புவது தான் சரி. மக்களில் பெரும்பான்மையோர் தாங்கள் தெய்வத்தின் குழந்தைகள் என்னும் உண்மையை உணர்ந்துகொள்வதில்லை."

பரமஹம்சதேவர்: "அப்படியானால் கடவுளைக் கருணாகரன் என்று நாம் கூறலாகாதா? கூறத்தான் வேண்டும். நம்மை நாம் கடவுளின் குழந்தைகள் என்று கருதாதிருக்கும் காலமெல்லாம் நாம் கடவுளைக் கருணையே வடிவெடுத்தவர் என்று கருதி அவரிடத்தில் விண்ணப்பித்தல் வேண்டும். அனுபூதிக்குப் பிறகு கடவுளை நாம் நம் தந்தை என்றோ தாய் என்றோ உணர வருகிறோம். கண்ணீரும் கம்பலையுமாகத் தெய்வத்திடத்து நம் பிரார்த்தனையைச் செலுத்த வேண்டும். சாதன தசையில்கடவுளை எல்லா விதமான விபூதிகள் உடையவராகக் கருதி வணங்குதல் முற்றிலும் அவசியமாகிறது.''

எந்நாள் கண்ணி

(தாயுமானவர் இயற்றியது)

14-1. பண்ணின் இசைபோலப் பரமன்பால்
நின்ற திறன்
எண்ணி அருள் ஆகி இருக்கு நாள் எந்நாளோ.

பாட்டும் அதற்குரிய இசையும் இணைபிரியாதவைகளாம்.

உயிரும் உடலும் போன்றவை அவை இரண்டும். ஒன்றினின்று மற்றவற்றைப் பிரித்தெடுத்தால் அவை உதவமாட்டா. உடல் பிணமாகப் போகிறது. உயிர் தன்னை விளக்க முடியாத நிலையிலிருக்கிறது. ஆகையினால் உயிரும் மெய்யும் சேர்ந்திருக்கின்றபொழுதே காரியத்திற்கு நன்கு உதவுகின்றன. அதே விதத்தில் பண்ணும் இசையும் இணைபிரியாதவைகளாம். இங்ஙனம் ஈசனும் அவனுடைய விபூதியும் இணைபிரியாதவைகள். சாதனத்தில் ஆரம்பதசையிலிருப்பவர்களுக்கு அவன் படைத்துள்ள விபூதியைக் கொண்டே ஒருவாறு அவனை அறியும் திறமை உண்டாகிறது. இதை ஓர் அருமையான உபமானத்தின்மூலம் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சதேவர் விளக்குகின்றார். ஒரு தடாகத்தின் மேல் பரப்பில் கொடிகள் பல பரவியிருக்கின்றன. அவைகளுள் ஏதேனும் ஒன்றைப் பற்றிப் பிடித்துக் கொண்டால் அதன் துணைகொண்டு ஏனைய பகுதிகளையும் நம் வசம் ஆக்கலாம். அதே விதத்தில் ஈசனுக்குரிய கணக்கற்ற விபூதிகளில் சாதகன் ஒருவனுக்கு விளங்குகின்ற ஏதோ ஒரு விபூதியைக் கையாண்டு கசிந்துருகிப் பரமனிடத்தில் விண்ணப்பிப்பானாகில் படிப்படியாக அவர்பால் உள்ள விபூதியின் ஏனைய பகுதிகளும் அவனுக்கு விளங்குகின்றன. இங்ஙனம் ஈசனுடைய விபூதிகள் சாதகனுடைய உள்ளத்திலே ஓங்கி உருவெடுப்பதற்கேற்றவாறு அவன் முன்னேற்றமடைகின்றான். மேல் நிலைக்குப் போகப் போக இறைவனுடைய விபூதிகள் அனைத்தும் சாதகன் உள்ளத்தில் ஒடுங்கி மறைந்துபட்டுப் போகின்றன. இறைவன்தான் எஞ்சியிருக்கின்றான்.

இசையின் துணைகொண்டு பண்ணைப் பாடவும் அதன் சாரத்தை அறிந்து கொள்ளவும் வல்லவனாக இசைவல்லான் ஒருவன் ஆவது போன்று இறைவனுடைய விபூதிகளில் ஏதேனும் ஒன்றை உறுதியாகப் பற்றிப் பிடித்துக் கொண்டு ஆத்ம சாதகன் இறுதியில் இறைவனை அடையப் பெறுகிறான் என்பது இக்கண்ணியின் உட்பொருளாம்.

14-2. அறிவோடு அறியாமை அற்று அறிவினூடே
குறியில் அறிவு வந்து கூடுநாள் எந்நாளோ.

உயிர்வகைகளனைத்தும் அறிவு சொரூபம் எனினும் அவைகள் பிரபஞ்சத்தைப்பற்றிய நிறையறிவு அடையப் பெற்றவைகள் ஆக மாட்டா. ஒவ்வோர் உயிரும் தன் தன் தரத்திற்கேற்றவாறு பிரபஞ்சஞானம் அடையப் பெற்றவையாயிருக்கின்றன. பிரபஞ்ச ஞானத்திலே கடைநிலையில் உள்ளவனும் தன் ஞானத்தை மூலப்பொருளாக வைத்துக் கொண்டு கடவுள் நாட்டத்தில் ஈடுபடலாம். சான்று ஒன்றை இதற்கு உபமானமாக எடுத்துக்கொள்வோமாகில் பிறகு இக்கண்ணியின் உட்பொருள் தெளிவுற நமக்கு விளங்கும்.

ஸ்ரீராமன் இலங்கையைச் சென்றடைவதற்குச் சேதுபந்தனம் கட்டினான். அப்பொழுது பக்தி பூர்வமாக அவனுக்குப் பணிவிடை பண்ணுவதற்குக் குரங்குகள் குன்றுக்கு நிகரான கற்களைத் தூக்கிக்கொண்டுவந்து போட்டுப் பாலம் கட்டிமுடித்தன. இவைகளுக்கிடையில் அணில் ஒன்று தன்போக்கில் ராமனுக்குச் சேவை பண்ணியது. அது தன் வாலை நீரில் நனைத்து மண்ணில் புரண்டு தன் வாலில் ஒட்டிய மண்ணைக் கொண்டு வந்து போட்டுப் பாலங்கட்ட உதவியது என்பது ஐதிகம். ஸ்ரீராமனுக்குப் பக்தி பூர்வமாகப் பண்ணும் பணிவிடைகள் அனைத்தும் பிரீதி உண்டுபண்ண வல்லவைகளாம்.

இதே விதத்தில் ஒவ்வொரு ஜீவனும் தாம் படைத்துள்ள அல்ப பிரபஞ்ச ஞானத்தையும் கடவுள் வழிபாட்டுக்காகப் பயன்படுத்தவேண்டும். அல்ப அறிவு படைத்தவனும் தன்னுடைய அறிவைக் கடவுள் நாட்டத்தில் செலுத்துவானாகில் அது நல்ல வழிபாடாம்.

குறி என்பது பரம்பொருள். ஜீவன் தன்னுடைய சிற்றறிவைச் சரியாகப் பயன்படுத்துவானாகில் குறியை எளிதில் அடையலாம் என்

பது இக்கண்ணியின் உட்பொருள்.

14-3 சொல்லால் மனத்தால் தொடராச்சம்பூரணத்தில் நில்லா நிலையாய் நின்றிற்பது எந்நாளோ.

ஜீவாத்மன் ஒருவனுக்கு அமைந்துள்ள நிலைகளுள் அச்சம் என்பது ஒன்று. பயப்படும் பாங்குடையவனாக ஒவ்வொரு ஜீவனும் வாழ்ந்து வருகின்றான். ஜங்கமநிலையை எட்டியுள்ள உயிர்களிடத்தே அச்சத்தைப் பெரிதும் காண்கின்றோம். பறவை ஒன்றைப் பார்த்தால் இவ்வுண்மை நன்கு விளங்கும். எத்தருணத்தில் என்ன பாங்கில் தன் சத்துரு வந்து தன்னைத் தாக்குமோ என்னும் அச்சம் இயல்பாக அதனிடத்து அமைந்திருக்கிறது. மிருகம் ஒன்றின் பாங்கும் அத்தகையதேயாம். மிருகேந்திரனாயுள்ள சிங்கத்துக்குக்கூட ஓரளவு அச்சம் உண்டு. ஏனென்றால் யானையின் கூட்டம், அல்லது காட்டெருமையின் கூட்டம் திடீரென்று தாக்கினால் அந்த ஆபத்தினின்று தன்னைக் காப்பாற்றிக்கொள்ளுதல் சிங்கத்துக்குச் சுலபத்தில் அமையாது. அதை முன்னிட்டுத் தான் வல்லமை வாய்ந்த சிங்கம்கூட அச்சத்துக்கு உட்பட்டு வாழ்ந்து வருகிறது. இறைவனுடைய சிருஷ்டியிலே ஜீவ ஜந்துக்களனைத்துக்கும் சத்துருக்கள் இருக்கின்றன. ஆகையினால் எதிரியிடமிருந்து தங்களைக் காப்பாற்றிக் கொள்ளும் பயிற்சியை ஜீவஜந்துக்கள் அனைத்தும் பெற்றுவருகின்றன. பரிணாமத்தில் மேல் நிலைக்கு வருவதற்கேற்ப அச்சமும் அதிகரித்துக் கொண்டே வருகிறது. அஞ்சுகிற பாங்கில் உச்ச நிலை எட்டியிருப்பவன் மனிதன். ஒவ்வொரு மனிதனுக்கும் அவனவன் பாங்கை முன்னிட்டு அச்சம் உள்ளத்தில் ஆழ்ந்து குடியிருந்து வருகிறது. வறுமையைப் பற்றிய அச்சம், நோயைப்பற்றிய அச்சம், சமுதாயத்தில் தனக்கு வேண்டியவாறு அந்தஸ்து வரவில்லையே என்ற அச்சம்— இங்ஙனம் மனிதன் கொள்ளுகிற அச்சத்துக்கு முடிவே இல்லை. இவையனைத்துக்கும் மேலாக மரணபயத்தைக் குறித்து மனிதன் படாதபாடு படுகிறான். மரணம் வந்து வாய்த்த காலை மட்டும் மற்ற உயிர்கள் அதைக் குறித்து அஞ்சி அதிலிருந்து தப்பித்துக்கொள்ளவும் முயல்கின்றன. மற்று மனிதனோ எத்தனையோ அச்சங்களைக் குறித்துக் கற்பனை பண்ணிக் கொள்கிறான்.

மற்றுக் கடவுள் வழிபாடு என்பது அலாதியாக மனிதனுடைய செயலாம். இறைவனுடைய அருளுக்குப் பாத்திரமாவதற்கேற்ப அவன் அச்சத்தை வெல்லுகின்றான். அபயம் அல்லது எதற்கும் அஞ்சாத வரத்தை இறைவனிடமிருந்து பெறவல்லவன் மனிதனேயாம். நமனையஞ்சோம், நரகத்தில் இடர்ப்படோம் என்னும் பண்பாடு அலாதியாக மனிதனுக்குரியதாம். ஆனால் இப்பண்பாடு அமைதற்கு முன்பு அவன் யாண்டும் அச்சமே வடிவெடுத்தவனாக இருக்கிறான். ஒவ்வொரு மனிதனுக்கும் ஒவ்வொரு காரணத்தை முன்னிட்டு அச்சம் உள்ளத்தில் குடிகொண்டிருக்கிறது. அதைச் சொல்லால் விளக்குதல் சாத்தியப்படாது. ஏன் இவ்வளவு தூரம் அஞ்சவேண்டும் என்று மனிதனுக்கே விளங்குவதில்லை. ஆதலால் தன்னை வாட்டுகிற அச்சத்தை உள்ளபடி கிரஹித்துக்கொள்ள மனிதனுக்கே இயலுவதில்லை. அத்தகைய ஏழை நெஞ்சம் படைத்தவனாக மனிதன் உலகில் உழன்று வருகின்றான். எண்ணிக்கையில் அடங்காத எல்லா விதமான அச்சங்களையும் அகற்றவல்லது தெய்வ பக்தி ஒன்றே என்னும் உண்மையை மக்களுள் சிலரே அறிய வருகின்றனர். தீவிரமாக ஆத்மசாதனத்தில் ஈடுபடுவது ஒன்றே அச்சத்தைத் தவிர்ப்பதற்கு உற்ற உபாயமாம்.

பூரணத்தை அடைவது ஜீவர்களின் குறிக்கோள் ஆகிறது. பூரணம் என்பது அகண்டமாய் நிறைந்துள்ள நிறைநிலையாம். இதற்குச் சான்று ஒன்று எடுத்துக்கொள்வோம். கடலினின்று ஆவியாகக் கிளம்பி மேலே போன நீர் மீண்டும் நதியாக வடிவெடுத்துக் கடலைச் சென்றடையும் பரியந்தம் அதற்கு ஓய்வு இல்லை. கடலைச் சென்றடைவதற்கு மேலான பேறு அந்நதிக்கு இல்லை. அதே பாங்கில் ஜீவகோடிகளனைத்தும் பூரணப் பொருளாகிய பரமனிடத்திருந்து தோன்றி வந்தவைகள். விவேகத்தோடு கூடிய மானுட நிலையை எட்டிய பிறகே ஒவ்வொரு ஜீவனுக்கும் இவ்வுண்மை விளங்குகிறது. ஆதலால் பூரணத்தை எட்டும் பரியந்தம் மனிதன் எத்தனையோ அல்லல்களுக்கும் அச்சங்களுக்கும் ஆளாகிறான். அவை யாவும் அவனுடைய மனதை ஓயாது வாட்டிவருகின்றன.

விவேகானந்தர் கடிதத்தில் கூறியருளிய கருத்து-14

தர்மபாலா என்ற அன்பருக்கு 1894ஆம் ஆண்டு அமெரிக்காவிலிருந்து சுவாமிஜி எழுதிய கடிதத்தில் உள்ள கருத்துக்களாவன.

இந்நாட்டில் காணும் கிறிஸ்தவ மதக்கொள்கைகள் இந்தியாவில் காணப்படுபவைகளிலிருந்து முற்றிலும் மாறுபட்டவைகளாம். இந்தியாவில் புகட்டுகின்ற கிறிஸ்தவ மதம் சுயநலத்தை அடிப்படையாகக் கொண்டது. நேர்மையினின்று முற்றிலும் மாறுபட்டது. அதற்கு ஆதரவு தருகின்ற மேல் நாட்டவர்கள் மற்ற நாடுகளில் இருக்கின்ற மக்களை மிகக் கீழ்த்தரமானவர்களாகக் கருதுகிறார்கள். அன்னவர்களை உய்விப்பது நாகரிகம் வாய்ந்துள்ள ஐரோப்பியர் கடமை என அவர்கள் கருதுகின்றனர். ஆகையினால் இந்தியாவில் நாம் காணுகின்ற கிறிஸ்தவ மதப் பிரசாரகர்களை ஒரு நாளும் நாம் நம்பலாகாது. மதப்பிரச்சாரத்திற்கு அவர்கள் முற்றிலும் தகுதியற்றவர்கள். கூலிப்படை போன்று அவர்கள் நடந்து கொள்கின்றனர். உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்று பேசும் பாங்குடையவர்கள் அவர்கள். ஏதேனும் ஒரு விதத்தில் கிறிஸ்தவ மதத்தை மற்றவர்கள் மீது திணித்தாகவேண்டும் என்னும் ஒரு கொள்கையில் அவர்கள் ஊறியிருக்கின்றனர். ஆதலால் அத்தகைய மனப்பான்மை படைத்தவர்கள் ஒரு நாட்டின் நன்மைக்காக உழைப்பவர்கள் அல்லர். அந்த நாட்டின் பண்பைப் பாழ்படுத்துவதுதான் அவர்கள் பழகுகின்ற சமய அனுஷ்டானம் ஆகும்.

மற்று இங்கு நான் காணும் கிறிஸ்தவ மதமோ முற்றிலும் பாராட்டுதற்குரியது. சமய வெறிக்கும் இங்கிருக்கும் சமயப் பிரச்சாரகர்களுக்கும் வெகுதூரம். தங்கள் மதம்தான் உலகத்தில் மிக மேலானது என்னும் எண்ணம் இங்கிருப்பவர்க்கிடையில் இல்லை. இவர்கள் நேர்மையே வடிவெடுத்தவர்கள். சுயநலத்துக்கும் இவர்களுக்கும் வெகுதூரம். வேதாந்தம் போன்ற பிறமதங்களை இங்கிருப்பவர்கள் பெரிதும் பாராட்டுகின்றனர். தீவிரமாக மதப் பற்றுடைய கிறிஸ்தவ மதப் பிரச்சாரகர்கள் சிலர் என்னோடு ஒட்டி உறவாடுகின்றனர். நேர்மையும் உள்ளன்பும் வடிவெடுத்தவர்களாக அன்னவர் இலங்குகின்றனர். பல இடங்களில் கிறிஸ்தவ தேவாலயங்களில் போய் நான் இந்து மதத்தைப் பற்றிப் பேசவேண்டும் என்று அழைத்தனர். இத்தகைய அழைப்பை இந்தியாவில் ஒருநாளும் எதிர்பார்க்க முடியாது. இந்தியாவில் இருக்கும் கிறிஸ்தவப் பிரச்சாரகர்களின் கருத்துப்படி கிறிஸ்து நாதரைப் பின்பற்றுபவர்கள்தாம் உண்மையான நாகரிகம் படைத்தவர்கள்; மற்றவர்கள் எல்லாரும் காட்டுமிராண்டிகள். உய்வு அடைவதற்கு அவர்களுக்குக் கிறிஸ்தவ மதத்தைத் தவிர உபாயம் வேறு ஏதும் இல்லவே இல்லை. அத்தகைய புல்லிய மனப்பான்மை படைத்திருக்கிறவர்களை இங்கு அமெரிக்காவில் உள்ள மதப்பிரச்சாரகர்களுக்கிடையில் மருந்துக்குக் கூட காணமுடியாது. தாங்கள் கடைப்பிடிக்கும் மதந்தான் மற்றவைகளைவிட மேலானது என்னும் கொள்கை ஆணவ அகங்காரத்தை அடிப்படையாகக் கொண்டது. கடவுள் நம்பிக்கை உடையவர்கள் அந்தப் பாங்கில் சமுதாயங்களைப் பொருள்படுத்த மாட்டார்கள். தாய் ஒருத்தி தன் குழந்தைகளின் பாங்குகளுக்கும் ஜீரண சக்திக்கும் ஏற்றவாறு விதவிதமான உணவுவகைகளைச் சமைக்கின்றாள். அதே விதத்தில் ஈசன் வெவ்வேறு மனப்பான்மைக்கு ஏற்றவாறு விதவிதமான மதங்களை உலகில் நிர்மாணித்துள்ளார் என்பது உலக நடைமுறையைப் பற்றிய உண்மையாம். மதவெறி பிடித்திருக்கிறவர்களுக்கு இவ்வுண்மை ஒவ்வாது. மதவெறியின் வாயிலாகச் சமுதாயத்தில் பிளவையும் பிணக்குகளையும் அவர்கள் உண்டு பண்ணுகின்றனர். சரியான சமயம் சாந்தத்தையும் பொறுமையையும் புறமதச் சகிப்புத் தன்மையையும் அடிப்படையாகக் கொண்டதாம். அதிவிரைவில் இந்த நன்மைகளை உண்டு பண்ணும் இயக்கங்களே முன்னணிக்கு வரும். வேற்றுமைகளை வளர்க்கும் இயக்கங்கள் முன்னேற்றமடையமாட்டா. இன்றைக்கு அறிவுத் துறையில் வேகமான முன்னேற்றம் நிகழ்ந்து வருகிறது. அதற்கேற்பச் சமயத்துறையில் ஒற்றுமை வளர்வது அவசியம்.

ஞான வெட்டியான் - 15

ஏழு ஜாடி தங்கம்

பண்டொரு காலத்தில் அம்பட்டன் ஒருவன் இருந்தான். அக்காலத்தில் சிற்றரசனுகவிருந்த ஒருவனுக்கும் ஏனைய பிரமுகர்களுக்கும் அவன் க்ஷவரம் செய்து வந்தான். ஆகையினல் வேண்டியவளவு செல்வம் படைத்தவனுக அந்த அம்பட்டன் இருந்தான். ஒருநாள் அவன் தனியனுகப் பக்கத்து ஊருக்கு நடந்து போய்க்கொண்டிருந்தான். வழியில் ஏழுஜாடி தங்கம் வேண்டுமா? என்னும் ஓசை அவன் காதில் விழுந்தது. நாலாபக்கமும் பார்த்தான். மனிதர் யாரும் தென்படவில்லை. 'ஆம் வேண்டும்' என்று தன்போக்கில் அவன் பதில் கொடுத்தான். நீ வீட்டுக்குப் போய்ப் பார்; ஏழு ஜாடி தங்கம் உன் வீட்டில் வைக் கப்பட்டுள்ளது' என்ற ஓசை மீண்டும் அவன் காதில் விழுந்தது. வீட்டுக்குத் திரும்பி ஓடி னுன். என்ன அதிசயம்! ஏழு ஜாடிகளைத் தன் வீட்டில் பார்த்தான். ஒவ்வொன்ருகத் திறந்து பார்த்தபொழுது ஆறு ஜாடிகளில் தங்கக் கட்டி கள் நிறைந்து இருந்தன. ஏழாவது ஜாடியில் மட்டும் கொஞ்சம் குறைவு. உடனே அம்பட் டன் மனதில் தோன்றியது. 'ஹா என்ன அதிசயம்! ஏழாவது ஜாடியும் நிறைந்திருக்கு மாகில் 'நான் பாக்கியவனுவேன்' என்னும் எண்ணம் அவன் உள்ளத்தில் உதித்தது. ஏழாவது ஜாடியை எப்படியாவது நிரப்பியாக வேண்டுமென்று தீர்மானித்தான். அதற் கேற்ற திட்டம் போட்டான். தான் பணிவிடை பண்ணிவந்த அரசனிடத்தில் விண்ணப்பித் தான். தன்னுடைய சம்பளத்தை இரண்டு மடங்காக்க வேண்டுமென்பது அவனுடைய விண்ணப்பம். அரசனிடமிருந்து அனுகூல மான விடை வந்தது. அங்ஙனமே ஏனைய பிரமுகர்களிடம் சென்று தனக்குத் தரும் சம்ப ளத்தை இரண்டு மடங்காக்க வேண்டுமென்று வேண்டினன். மற்றவர்களும் அதற்கு இசைந் தார்கள். தன் வீட்டுச் செலவைப் பாதியாகக் குறைத்தான். மாதந்தோறும் மிஞ்சிய வரு வாயைக் கொண்டு தங்கக் கட்டியை வாங்கி னுன். இங்ஙனம் தங்கக்கட்டிகளைச் சேகரித்து ஏழாவது ஜாடியில் போட்டுக்கொண்டே வந் தான். மற்று ஜாடியோ நிரம்பியபாடில்லை. அம்பட்டன் ஏக்கம் பிடித்தவனுனன். அவன் உடல் பாதியாய் மெலிந்து போயிற்று. அரச னுக்கு அவன் க்ஷவரம் பண்ணிக்கொண்டிருந்த பொழுது கேள்வி ஒன்று வந்தது. அதாவது 'என்னடா சம்பளம் இரண்டுபங்கு வாங்கு கின்ருய். அதற்கிடையில் தொடர்ந்து உன் னுடைய உடல் மெலிந்து வருகிறது. யக்ஷ னுடைய ஏழு ஜாடி தங்கம் உனக்குக் கிடைத் திருக்கிறதா' என்று கோமான் கேட்டான். அம்பட்டன் திகிலடைந்தான். வேந்தே! தங்க ளுக்கு எப்படி அது தெரியவந்தது என்று விண்ணப்பித்தான்? உன்னுடைய மெலிந்த உடலும் முகவாட்டமும் அவ்வுண்மைக்கு விளக்கங்களாகின்றன என்று வேந்தன் விடை யளித்தான். மேலும் அக்கோமகன் கூறிய தாவது: 'அடே ஏழாவது ஜாடி ஒருநாளும் நிரம்பாது. அதுதான் யக்ஷனுடைய ஏழு ஜாடி தங்கத்தைப் பற்றிய உண்மை.' அம்பட்டன் வீட்டுக்கு ஓடினன். 'யக்ஷா! உன்னுடைய ஏழாவது ஜாடியை நிரப்புதற்கு நான் பட்ட பாடு போதும். உடனே உன் ஜாடிகளை என் வீட்டிலிருந்து காலி செய்' என்று இயம்பினன். உடனே அவைகளும் மறைந்து போயின. அம்பட்டனுடைய கவலையும் ஒழிந்துபட்டுப் போயிற்று. போதுமென்ற மனமே பொன் செய் யும் மருந்து என்னும் முடிவுக்கு அவன்வந்தான்.

யக்ஷனுடைய ஏழு ஜாடி தங்கம் உருவக மாக எக்காலத்திலும இருக்கிறது. சிலருக்குத் திடீரென்று ஏதாவது ஒரு காரணத்தை முன் னிட்டுப் பணம் வந்து குவிகிறது. ஆசை என்னும் யக்ஷனும் அவர்கள் உள்ளததில் புகுந்து விடுகின்ருன். பிறகு ஆசையை நிறை வேற்றுதற்கு அந்த மனிதன் படாதபாடு படுகின்ருன். பணத்தைச் சம்பாதிப்பதில் சிற்சில வேளைகளில் நெறிபிறழ ஆரமபிக் கின்ருன்.

ஆனல் சாந்தமான வாழ்க்கைக்கும் அத்த கைய பேராசைக்காரனுக்கும் வெகுதூரம். ஏதேதோ முறைகளைக் கையாண்டு பணத்தை அன்னவன் சேகரிக்கின்ருன். அவனுடைய ஆசையும் மேலும் மேலும் வளர்கிறது.

ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாம ஸ்தோத்ரம்

137. चतुरात्मा சதுராத்மா நான்கு சொரு பத்தை உடையவர். பிரம்மதேவன் படைத்துள்ள நான்கு முகங்களில் அவருடைய சொருபம் வெளியாகிறது. இந்தப் பிரம்மதேவன் மகாவிஷ்ணுவினுடைய உந்திக் கமலத்தினின்று வந்தவன். ஆகையினால் தந்தை வேறு, மகன் வேறு அல்லர். நான்கு முகத்துடன் தோன்றிய பிரம்மதேவன், காலதேச நிமித்தமாக அடங்கியுள்ளார். பிரபஞ்சத்துக்கு விளக்கமாகிறார். காலம் நான்கு கூறுகளை உடையது. அவை கிருதயுகம், திரேதாயுகம், துவாபரயுகம், கலியுகம் என்பனவாம். தேசம் அல்லது இடத்தில் கிழக்கு, மேற்கு, தெற்கு, வடக்கு ஆகிய நான்கு பகுதிகள் அடங்கும். பிரமமதேவன் வேதநாயகன் என்றும் பெயர் பெற்றுள்ளான். நான்கு வேதங்களில் பிரபஞ்சத்தின் அமைப்பு சொல்லப்பட்டிருக்கின்றது. இனி நிமித்தத்தில் நான்கு கூறுகள் உள. தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம் என்பன உயிர்களின் வாழ்க்கையில் அமைந்துள்ள படித்தரங்கள். நான்கு வருணங்கள் இயற்கையினுடைய கூறுகளாகின்றன. நான்கு ஆசிரமங்கள் அலாதியாக மனிதனுக்கு உரியவைகளாம். ஆகவே இக்காரணங்களை முன்னிட்டு மகாவிஷ்ணுவைச் சதுராத்மன் என்று பகர்வது பொருந்துகிறது.

138. चतुर्व्यूहः சதுர்வ்யூஹ: நான்கு வித மகிமைகளை உடையவர்.

நான்குவித மகிமைகள் கிருஷ்ணவதாரத்தில் வெளியாகின்றன. அவையாவன: (1) பிறப்பையும் இறப்பையும் விளையாட்டாகச் செய்தல். (2) ராசலீலையின் மூலம் பராபக்தி விளக்கம். (3) கணக்கற்ற கோபிமார்களுக்குக் கோபிநாதனாயிருப்பதன் மூலம் பரமாத்மா ஜீவாத்மா தத்துவங்கள் விளக்கம்.

(4) காந்தாரி கொடுத்த விருஷ்ணி வம்சத்தின் அழிவைப்பற்றிய சாபத்தை அமைதியாக ஏற்றுக்கொள்ளுதல்.

139. चतुर्दंष्ट्रः சதுர்தம்ஷ்ட்ர: நான்கு நெற்றிப்பற்களை உடையவர். இது நரசிம்மாவதாரத்தில் காட்டிய காட்சியாம்.

140. चतुर्भुजः சதுர்புஜ: நான்கு தோள்களை உடையவர். அமானுஷ சக்திக்குச் சின்னமாக நான்கு கரங்களை உடைத்திருப்பவர்.

141. भ्राजिष्णुः ப்ராஜிஷ்ணு: அறிவுப்பேரொளியாக விளங்குபவர்.

142. भोजनं போஜனம் உண்ணும் உணவு. உணவு உண்ணாது உயிர்கள் வாழ்ந்திருக்க மாட்டா. உணவு உண்பதில் உயிர்களனைத்தும் மகிழ்வடைகின்றன. பிரகிருதியின்கண் உள்ள அனைத்தும் வெவ்வேறு விதங்களில் உயிர்வகைகளுக்கு உணவாக வந்து அமைகின்றன. அத்தகைய பாங்குடையவராகப் பரமன் இலங்குகின்றார்.

143. भोक्ता: போக்தா: அனுபவிப்பவர். பிரபஞ்சத்திலே நல்லுணவு அமைந்திருந்தால் மட்டும் போதாது. அத்தகைய உணவை ரசித்து உண்கிறவனும் தேவை. ஆகையினால் உணவாக வந்திருக்கின்ற அதே பரமாத்மன் அதை உண்டு மகிழ்ந்திருக்கும் ஜீவாத்மாக்களாகவும் வடிவெடுத்திருக்கிறார்.

144. सहिष्णुः ஸஹிஷ்ணு: எதிரிகளை அடக்குகிறவர்.

உயிர்வகைகளுள் தர்மத்தை முறையாக அனுஷ்டிக்கிறவர்கள் இறைவனுக்குகந்த பக்தர்கள் ஆகிறார்கள். தர்மத்தைப் புறக்கணித்து அதர்மத்தில் மூர்க்கத்தனமாய் மூழ்குகின்றவர்கள் சமுதாயத்திற்கும் இறைவனுக்கும் எதிரிகளாகின்றார்கள். அத்தகைய அசுர இயல்பு படைத்திருக்கிறவர்களுடைய ஆட்சிமுறை நெடுநாள் நீடித்திருப்பதில்லை. இறைவனின் சன்னிதான விசேஷத்தால் அது விரைவில் அல்லது நாளடைவில் அழிந்துபட்டுப் போகின்றது.

145. जगदादिजः ஜகதாதிஜ: உலகம் உண்டாவதற்கு மூலகாரணமாயிருப்பவர்.

146. अनघः அனக: பழுதுபடாதவர்.

பன்மையே வடிவெடுத்துள்ள பிரபஞ்சத்தின்கண் நலம் கேடு ஆகிய இரண்டும் வடிவெடுத்திருக்கின்றன. அவை யாவுக்கும் பரம்பொருள் மூலகாரணமாயிருந்தும் அவர் நிர்த்தோஷமாய் அதாவது பழுதில்லாதவராய் இருந்து வருகிறார். இதற்குச் சான்று ஒன்று எடுத்துக் கொள்வோம். சினிமாத் திரைப்

படத்தில் தீப்பற்றி எரிகிற காட்சியும் கொலை யுண்டு இரத்தம் பெருகியோடுகிற காட்சியும் காண்கிறோம். ஆயினும் திரையானது தீக்கு இரையாவதில்லை. நாம் கண்ட இரத்தப்பெருக் கின் விளைவாகத் திரையில் கறையேதும் காண் பதில்லை. அதே விதத்தில் நல்லார் பொல்லார் ஆகிய எல்லார்க்கும் பொதுவில் உள்ளத்தில் வீற்றிருக்கின்ற இறைவன் எக்காரணத்தை முன்னிட்டும் மாசுபடியாதவராக வீற்றிருந்து வருகிறார்.

147. विजयः விஜய: பெரிய வெற்றிக்கு இருப்பிடம்.

ஜீவன் ஒருவன் அக்ஞானத்தை அகற்றி ஞானத்தில் ஒளிருமிடத்து அது அவனுக்குப் பெரிய வெற்றியாகிறது. பந்தபாசத்தில் உழலும் ஜீவன் ஒருவன் அதை ஒதுக்கித் தள்ளி வைராக்கிய புருஷனாக மாறுவானாகில் அது அவன் பெற்றுள்ள பெரிய பேறு ஆகி றது. முயற்சியுடைய ஜீவன் ஒருவன் நேர்மை யாக உழைத்து வறுமையைக் களைந்து செல் வம் படைத்தவனாக ஆவானாகில் பெரிய பேறு பெற்றவனாகின்றான். இங்ஙனம் ஞானம், வைராக்கியம், ஐஸ்வர்யம் ஆகியவைகளைத் தக் கார்க்கு எடுத்து வழங்கும் பாங்குடையவராகப் பகவான் இருப்பதால் அவர் விஜயன் என் னும் பெயர் பெற்றுள்ளார்.

148. जेता: ஜேதா: இயல்பாகவே அனைத் திற்கும் மேம்பட்டிருப்பதால் ஜயசாலியாய் விளங்குபவர்.

149. विश्वयोनिः விஸ்வயோனி: உலகனைத் தையும் தோற்றுவிப்பவன்.

உறங்குகின்ற ஜீவன் ஒருவன் கனவு காண் கின்றான். அக்கனவிலே தனக்குத் தோன்றிய வைகளை யெல்லாம் உண்டுபண்ணிக்கொள் கிறான். அதே பாங்கில் பரமாத்மாவானவர் பிரபஞ்சம் முழுதையும் தோற்றுவித்துள்ளார்.

150. पुनर्वसुः புனர்வஸு: உடலில் உயிர் களாயிலங்குபவன்.

உடலை க்ஷேத்ரம் என்றும் அதில் குடியிருக் கும் ஜீவாத்மனை க்ஷேத்ரக்ஞன் என்றும் ஸ்ரீகிருஷ்ண பரமாத்மா கீதையில் பகர்ந்துள் ளார். பிறகு தம்மைப்பற்றி அவர் பகருங்கால் தாமே எல்லா க்ஷேத்ரங்களிலும் இலங்குகின்ற க்ஷேத்ரக்ஞன் என்று பகருகின்றார்.

151. उपेन्द्रः உபேந்த்ர: இந்திரனுக்குத் தலைவனாயிருப்பவன்.

தத்துவ ரூபமாக ஆராயுமிடத்து இந்திரன் என்னும் சொல் மனதைக் குறிக்கிறது. அத்த கைய மனதுக்குத் தலைவனாயிருப்பது ஆத்ம சொரூபமாம்.

152. वामनः வாமன: வாமனனாக இலங்கு பவன்.

புராணக் கொள்கைப்படி வாமனன் என்ப வன் குட்டைமனிதன். தத்துவரூபமாக ஆராயு மிடத்து சூட்சுமமாகவும் சிறியவனாகவும் இருப் பவன் வாமனன். ஆத்மா சிறியதில்சிறியதாயும், பெரியதில் பெரியதாயும் இருந்துவருகிறது. வடிவத்தில் சிறியவர்களெல்லாரும் அறிவில் சிறியவர்கள் அல்லர். வண்ணத்துக்கும் அறிவுக் கும் தொடர்பு ஏதுமில்லை. ஆகையினால்தான் வண்ணத்தில் சிறியவர்கள் எல்லாரும் சிறிய வர் அல்லர் என்ற கோட்பாடு வந்துள்ளது.

153. प्रांशुः ப்ராம்சு: மூவுலகையும் அளப்ப தற்கேற்ற உயரமானவர்.

பகவான் வாமன வடிவெடுத்துப் பலிச்சக்கர வர்த்தியிடம் தமக்குத் தங்குவதற்கு மூன்று அடி இடம் வேண்டும் என்று வேண்டினார். அர சனும் அந்த வேண்டுதலுக்கு இணங்கினான். உடனே பகவான் தமக்கு யாண்டும் சொந்த மாயுள்ள விசுவரூபத்தை எடுத்தார். இரண் டடிகளில் அண்டம் அனைத்தையும் அடைத்து விட்டார். மூன்றாவது அடிக்குப் பலிச்சக்கர வர்த்தி தன் சிரசைத் தரக் கடமைப்பட்டிருந் தான். இப்புராண வரலாற்றில் பெரிய தத்து வம் ஒன்று புதைந்துள்ளது. பரம்பொருள் அணுவுக்கணுவாகவும் அண்டங்கள் அனைத் திற்கும் அப்பாற்பட்டதாகவும் உள்ளது. அப் பெரிய பொருளைத் திருப்திப்படுத்துதற்கு ஜீவன் ஒருவன் செய்ய வேண்டிய செயல் தன் அகங்காரத்தை ஒதுக்குதலாம். தர்மத்தினின்று பிசகாது வாழ்ந்திருப்பவனுக்கு அச் செயல் மிக எளிதாம்.

லௌகிகமாகப் பார்க்குமிடத்தும் இச்செய லில் பெரிய கருத்து ஒன்று அடங்கியிருக் கிறது. சாமர்த்தியம் மிக வாய்க்கப்பெற்றவ னுக்குத் தங்கச் சிறு இடம்கிடைத்தால் போது மானது. அதை வைத்துக்கொண்டு அவன் தன் காரியத்தைச் சமாளித்துக்கொள்வான்.

ஸத் ஸம்பாஷணை

கேள்வி : (449) வீட்டில் ஒருவர் இறந்துவிட்டால் தீட்டு என்று சொல்கிறார்கள். அப்போது பூஜை செய்யலாமா?

பிறப்பை முன்னிட்டோ இறப்பை முன்னிட்டோ வீட்டில் தீட்டு ஏற்பட்டு விட்டால் தீட்டு முடிவுபெறும் பரியந்தம் வீட்டிலே கடவுள் வழிபாடு செய்யலாகாது என்பது கர்மகாண்டக் கோட்பாடாகும். கர்ம காண்டத்தின்படி ஸ்மசானத்துக்குப் போய் வந்தால் நீராடிவிட்டு வீட்டுக்குள் வரவேண்டும் என்பது நியமம்.

ஆனால் பக்தி மார்க்கத்தையும், ஞான மார்க்கத்தையும் கடைப் பிடிப்பவர்களுடைய கொள்கையும் கோட்பாடும் இதினின்று முற்றிலும் வேறுபட்டவைகளாம். பரம பக்தன் ஒருவன் பகர்ந்ததாவது: "இறைவா, உன்னை மறந்தால் உயிர் துறப்பேன்'' என்றான். ஸ்மசானத்தை ருத்ரபூமி என்கிறோம். ஆதலால் அது சிவனுடைய உறைவிடம் ஆகிறது. இக்கொள்கையின்படி சிவன் கோயிலுக்குப் போய் வருகிறவர்கள் எல்லாரும் தீட்டுப்பட்டவர்கள் ஆகிறார்கள். காசிக்கு மகாஸ்மசானம் என்று பெயர். ஆதலால் காசிக்குப் போய் வருகிறவர்கள் எல்லாரும் தீட்டுப்பட்டவர்கள் ஆகிறார்கள். இதுவும் பொருந்தாது. ஆகவே ஆத்ம சாதனத்தில் ஈடுபடுகிற ஒருவன் கர்மகாண்டக் கொள்கையை ஒதுக்கி வைத்துவிட்டுத் தன் போக்கில் கடவுள் வழிபாட்டில் ஈடுபடவேண்டும். வீட்டில் யாராவது மடிந்துபோனால் அப்பொழுதுதான் தீவிரமாகக் கடவுள் வழிபாட்டில் ஈடுபடவேண்டும். பக்தியும் ஞானமும் ஓங்குதற்கு அதுவே தக்க தருணமாகிறது.

கேள்வி : (450) இன்ப துன்பங்கள் வினைப் பயனா?

இன்பமும் துன்பமும் வினையின் விளைவாம். மனிதன் கர்ம சொரூபம். கர்மம் புரியாது அவன் கணப்பொழுதாவது உயிர் வாழ்ந்திருக்க முடியாது. பிறந்தது முதற்கொண்டு சாகும் வரையில் மனிதன் மூச்சு விட்டுக் கொண்டு இருக்கிறான். மூச்சு விடுவது கர்மம். உணவு உண்பது கர்மம். நீர் அருந்துவது கர்மம். நீராடுவது கர்மம். சரீரத்தினுள்ளே ஜீரணக் கருவிகள் செயல் புரிந்து வருவது கர்மம். எண்ணங்களை எண்ணுவது கர்மம். உள்ளத்தினுள் உணர்ச்சி ததும்பி எழுவது கர்மம். ஆதலால் கர்மம் செய்யாது உடல் எடுத்திருக்கும் எந்த ஜீவனும் ஒரு கணப்பொழுதாவது இருக்க முடியாது. அங்ஙனம் மனிதன் புரிகிற வினைகளுள் தனக்கு அனுகூலமானவை இன்பத்தைப் பெருக்குகின்றன. பிரதிகூலமானவை துன்பத்தை வளர்க்கின்றன. இதுவே இன்ப துன்பத்தைப் பற்றிய கோட்பாடாம்.

கேள்வி : (451) வழிபாட்டில் உருவ வழிபாடு சிறந்ததா? அருவ வழிபாடு சிறந்ததா?

கடவுளுக்குக் கற்பனையாகவோ ஒரு விக்ரஹத்தின் வாயிலாகவோ வடிவத்தை அமைத்துக்கொண்டு வழிபடுவது உருவ வழிபாடாகிறது. மனிதன் தானே உருவம் எடுத்துள்ளான். உருவம் எடுத்துள்ள மனிதனுக்கு உருவத்தின் வாயிலாகவே கடவுள் வழிபாடு பண்ணுவது மிகச் சுலபம்.

மற்றுக் கடவுள் பிரபஞ்சமெங்குமுள்ள அனைத்துமாய் உருவம் எடுத்திருக்கின்றார். எனவும் அந்த உருவங்களை யெல்லாம் கடந்த நிலையிலும் அவர் இருக்கின்றார். கடவுள் என்ற சொல் உருவங்களைக் கடந்திருப்பவரும் அவற்றின் உள்ளே இருப்பவரும் எனவும் பொருள் படுகிறது. கடந்த நிலையில் வைத்து அவரை வழிபடுகின்றவர்கள் அறிவு சொரூபமாகவும் ஆனந்த மயமாகவும் அவரைக் கருதுகின்றனர். இந்த இரண்டுவித வழிபாடுகளுள் உருவம் தாங்கியுள்ள மனிதனுக்கு உருவ வழிபாடே மிக எளிதில் கைகூடுகிறது. உருவ வழிபாடு அருவ வழிபாடு ஆகிய இரண்டினுள் யாருக்கு எது சிறந்தது எனத் தோன்றுகிறதோ அம்முறையில் அன்னவன் வழிபாடு செய்யலாம்.

கேள்வி: (452) ஒரு காரியம் நிறைவேறக் கடவுளைப் பிரார்த்தனை செய்கிறோம்; முயல்கிறோம். நிறைவேறிய பின்னர் கடவுள் அருளா? நமது முயற்சியா என்பதனை எப்படி அறிவது?

கடவுள் அருள் யாண்டும் எல்லார்க்கும்

பொதுவாயிருக்கிறது. அவர் அருள் இல்லா விட்டால் எந்த உயிரும் வாழ்ந்திருக்க முடியாது. மீன்கள் நீர் வாழ்வன எனவும் மக்கள் நிலத்திலே நடமாடுபவர்கள் எனவும் இயற்கை அமைந்திருக்கிறது. இத்தகைய அந்தந்த உயிருக்குப் பொருத்தமான அமைப்பே இறைவன் அருள் எனப்படுகிறது. நீரில் வாழும் மச்சம் செம்படவன் வலை வீசிய உடனே அந்த வலையில் அகப்படாது தூரமாக நீந்திப் போய்விடுகிறது. அது மச்சம் எடுத்துக்கொள்கிற முயற்சியாகிறது. மனிதன் நிலத்தில் நடந்து போகும்பொழுது நச்சுப் பாம்பு போன்ற ஆபத்தான ஜந்துக்களை அணுகாது ஜாக்ரதையாகப் போகிறான். அப்படி எச்சரிக்கையோடு நடப்பது மனிதன் எடுத்துக்கொள்கிற முயற்சியாகிறது. இவைகள் வாழ்க்கையை ஒட்டிய சாமானியமான நிகழ்ச்சிகளாம்.

பள்ளிக்கூடம் ஒன்று துவக்குவது, தொழிற்சாலை ஒன்று அமைப்பது—இவை போன்றவைகள் அசாதாரணமான செயல்கள். பள்ளிக்கூடம் துவக்குவது அவசியமா? என்னும் கேள்வியை மனிதன் முதலிலே ஆராயவேண்டும். அவசியமென்றால் அதற்கேற்ற இடம் பொருள் ஏவல் முதலியன அமைந்திருக்கின்றனவா? என ஆராய்தல் வேண்டும். அவை யாவும் முறையாக அமைந்திருந்தால் துவக்கிய கர்மம் வெற்றி பெறுகிறது. இதில் ஈசன் அருள் பின்னணியிலும் மனிதனுடைய முயற்சி முன்னணியிலும் வந்து நிற்கின்றன. மற்றோரிடத்தில் பள்ளிக்கூடம் ஒன்று நன்கமைக்கப்பட்டு இருக்கிறது. நடாத்துதற்கேற்ற மூர்த்தி இன்னார் என்று ஒருவனைத் தேடி வருகிறார்கள். அவன் உண்மையில் தகுதி வாய்ந்தவன். அவனை மற்றவர்கள் தேடிவந்தது ஈசன் அருள். தகுதி வாய்ந்தவன் அவ்வேண்டுதலை மறுக்கலாகாது. மறுத்தால் ஈசனுடைய ஆணையை அவன் புறக்கணித்தவனாகின்றான்.

ஈசன் அருள், மானுடப் பிரயத்தனம் ஆகிய இரண்டும் எங்கே ஒன்று சேர்ந்து இருக்கின்றனவோ ஆங்கு வெற்றியும் விரிவும் நல்வாழ்வும் சேர்ந்து அமைந்திருக்கின்றன என்று சஞ்சயன் பகவத்கீதைக்கு முடிவுரை மொழிகின்றான்.

ஆதலால் மனிதன் செய்கிற ஒவ்வொரு செயலும் ஈசனுடைய திட்டத்தை அனுசரித்து இருத்தல் வேண்டும்.'

வெற்றியானாலும் சரி தோல்வியானாலும் சரி அனைத்தும் ஈசன் செயலே. இதை அறிந்து கொள்ளுகிற ஆத்மசாதகன் இறைவன் அருளால் நிறைவேறியது என்று மேலும் இறைவனையே சார்ந்திருக்கின்றான். பந்த பாசத்தில் உழலும் மனிதனோ தோல்வியடைந்தால் கடவுள் தனக்கு அனுக்ரஹம் பண்ணவில்லையென்றும், வெற்றியடைந்தால் அவனுடைய முயற்சியால் நிகழ்ந்தவை யென்றும் எண்ணி துன்பத்துக்கும் இன்பத்துக்கும் ஆளாகிறான்.

கேள்வி: (453) தீட்சை பெறுதல் என்றால் என்ன? இது அவசியம்தானா? இதன் உட்கருத்து என்ன?

ஒவ்வொரு துறையிலும் நிபுணர் இருக்கின்றனர். ஒரு துறையில் இறங்கிச் செயல்புரிய விரும்புகிற ஒருவன் அத்துறையில் உள்ள நிபுணனை அணுகுகிறான். அந்நிபுணனும் நாடிய கருமத்தில் அவனுக்கு வழிகாட்டித் தருகிறான். அப்படி வழிகாட்டித் தருவது தீட்சை எனப்படுகிறது.

இனி தீட்சை எனும் சொல் அலாதியாகச் சமய அனுஷ்டானத்துக்கென்றே அமைந்துள்ளது. அந்தந்த சமயத்தில் ஆழ்ந்து செல்லும் ஆச்சாரியர்களும், குருமார்களும் இருக்கின்றனர். அன்னவர்களை அணுகும் சாதகனுக்குக் கடவுள் வழிபாடு சம்பந்தமான முறைகளை அப்பெருமக்கள் காட்டித் தருகின்றனர். அங்ஙனம் ஆத்ம சாதனத்தில் பிரவேசிப்பதற்கான முறைகளைக் காட்டித் தருகின்றவர்கள் பலர் இருக்கின்றனர். அவர்களுள் சுயநலம் கருதாது பரநலத்திலேயே கண்ணும் கருத்துமாயிருப்பவர்களை அணுகித் தீட்சை பெறுதலில் பயன் உண்டு.

ஆனால் மற்ற துறைகள் போன்று சமயத்துறையிலும் ஆஷாட பூதிகள் இருக்கின்றனர். அவர்களை அணுகுதல் பொருந்தாது. ஆகையினால்தான் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர் எந்தக் குருவையும் நாடாது அன்னையின் அருளையே நாடியிருந்தார். அம்முறைதான் இக்காலத்திற்குச் சாலச்சிறந்தது.

சனாதன தர்மத்தின் சிறப்புகள்

(திரு V. S. நரசிம்மன்)

உலகம் முழுவதிலும் ஆவிகளுக்கும், பேய் பிசாசுகளின் நடவடிக்கைகளுக்கும் நிறைய ஆதாரம் காணப்படுகின்றது! ஆயின் வேதாந்தக் கருத்தின்படி,ஒருவன் தன் அகத்தே உள்ள தன்மையையே புறத்தே தோற்றுவிக்கின்றான். இருட்டில் மரம் ஒன்றைப் பிசாசு என்று கருதுகிறான். உண்மையைச் சரியாக உணராது இருப்பதின்விளைவு அது. அச்சப்படுகின்றவன் அடிப்படை எதுவுமின்றி வெளியே பிசாசு ஒன்றைப் பார்த்தால், அது அவனுடைய மனதின் விகாரமே. நல்ல பிசாசு, கெட்ட பிசாசு என்று தொடர்புகொண்டு அவர்களுடன் பேசுவதாகச் சிலர் வீணே நம்புகின்றனர். ஆராயுமிடத்து இதுவும் மனத்தின் வெளிப்பாடே. (A seer projects his disposition outside.) பயத்தின் காரணமாக அது நிகழ்கிறது. உடல் இல்லாத ஆவிகள் வெளியே உலவக்கூடும். ஆயின் அவை மனிதர்களுடன் தொடர்வு கொள்வதில்லை. பேய், பிசாசு, பற்றிய நம்பிக்கைகள் தனிப்பட்ட மனிதர்களின் கருத்தே. ஆரோக்கியமான மனம் உள்ளவன் எங்கேயும் எந்தப் பிசாசையும் காண்பதில்லை! அது தான் சரியான நிலை.

கேள்வி: 22. 'அற்புதச் செயல்கள்' (Miracles) உண்மையில் நிகழ்த்தப்படுகின்றனவா? ஆன்மீக ஞானியின் மனப்பாங்கு இதில் எப்படி அமையும்?

பதில்: அற்புதச் செயல்கள், சித்திகள் சில சமயம் எதிர்பாராத வண்ணம் யோகிக்குக் கைவரப் பெறுகின்றன. இதயத் துடிப்பு, மூச்சு ஆகியவற்றை நிறுத்துதல், மற்றவர் கண்ணுக்குத் தெரியாது மறைதல், வெகு தொலைவில் நடக்கும் நிகழ்ச்சிகளைப் பார்த்தல், கேட்டல்—என்று அவை பலவகைப்படும். நல்ல முறையில் பண்பட்டு வரும் மனதினால் இவற்றைச் சாதிக்க இயலும். ஆயின் இவை சரியான பாதையிலிருந்து சாதகனைத் திருப்பி விட்டு விடும். சித்திகளின் பெருமையால் கவரப்பட்ட யோகியின் முன்னேற்றம் தடைபடுகின்றது. ஆன்மீக முதிர்ச்சி அவனுக்கு ஏற்படுவது கிடையாது. நம்முடைய வேதாந்த நூல்களும், பதஞ்சலி யோக சாஸ்திரமும் சித்திகளைப் புறக்கணிக்க வேண்டும் என்று தெளிவாகக் கூறியுள்ளன. இதில் ஈடுபாடு அதிகமானால் தீமையும் அதிகம் விளையும். நீ நெறி பிறழ்ந்து போகின்றாய். ஆகவே ஆன்மீகத்தின் சரியான எல்லையை நீ எய்த முடியாது. இறைவனின் கருவியாக நாம் செயல் புரியவேண்டும்; அதனால் எந்தத் தீமையும் விளையாது. நாம் உண்மையில் கர்த்தாக்கள் (செயல் புரிபவர்) அல்லர். எனவே சித்தியை அடைவதோ, வெளிக்காட்டுவதோ நம்மை அகங்காரத்தில் ஆழ்த்தி, 'கர்த்தா' என்ற எண்ணத்தை வலியுறுத்தும். அவற்றைப் பொருட்படுத்தாது புறக்கணிப்பதே சரியான நிலையாகின்றது.

கேள்வி: 23. கிறிஸ்து மதம் தன்னிடம் உள்ள எல்லாச் சக்திகளையும் பயன்படுத்தி, ஹிந்துக்களை மதம் மாற்றுகிறது. அவர்களுடைய இடைவிடாத முயற்சியைத் தாங்கள் எப்படிக் கருதுகின்றீர்கள்?

பதில்: சாதாரண மக்களிடையே ஹிந்து மதத்தைத் தவறாக விமர்சித்து, இழிவுபடுத்தும் செயலைக் கிறிஸ்துவப் பாதிரிகள் செய்கின்றனர். மறுபக்கம் அப்பாவி மக்களையும், ஆதரவு அற்றவர்களையும் கவர்ந்திழுக்க கவர்ச்சிகரமான திட்டங்களையும் செயல்படுத்துகின்றனர். சமுதாயத்தில் உள்ள வேற்றுமைகளையும், வறுமையையும் தனக்குச் சாதகமாக இதுகாறும் கிறிஸ்துவ மதம் பயன்படுத்தியது. தற்போது கல்வியின் முன்னேற்றத்தினால் அறியாமை அகன்றுள்ளது. சட்டத்தின் மூலம் ஜாதியினால் வரும் ஏற்றத் தாழ்வுகளும் நீங்கிவருகின்றன. அரசாங்கத்தின் முயற்சியால் பெருமளவு வறுமையும்நீக்கப்பட்டுள்ளது. எனவேகிறிஸ்துவர்களாக மதம் மாறுவதுசிறிது குறைந்துள்ளது.

விஷயம் தெரியாமல், தவறான விளக்கத்தைக் கேட்டு மதம் மாறிய அரைகுறை மனிதனைப் பற்றி நாம் கவலைப்படவேண்டாம். அதற்கு என எந்த ஒரு பெருமுயற்சியும் தேவை இல்லை. காலப்போக்கில் அவனே உண்மையை அறிந்து தாய் மதம் திரும்புவான்.

இப்போது அது நடந்து வருகின்றது.

கேள்வி: 24. இந்தியாவில் கிறிஸ்துவ மதத்தின் எதிர்காலம் எப்படி அமையும்?

பதில்: 'அணைத்துக்கொள்வது, அழிப்பது அன்று' இதுவே ஹிந்துமதத்தின் செயல். (Assimilation, not annihilation)

காலப்போக்கில் கிறிஸ்துவமதம் ஹிந்து சமயத்துடன்கலந்து அதனுடைய அங்கமாக மாறி விடும். தன்னுடைய தனித்தன்மையை ஓரளவில் பாதுகாத்து, ஹிந்துமதத்தின் பல சமயப் பிரிவுகளில் ஒன்ருக விளங்கும். இப்படி ஜீரணிக்கும் சக்தி ஹிந்து மதத்திடம் உள்ளது. அந்த நிலை ஏற்கனவே துவங்கிவிட்டது. காலப் போக்கில் இத்தகைய மாற்றம் விரைவாக அமைந்துவிடும்.

கேள்வி: 25. பல கிறிஸ்துவ சர்ச்சுகளில் ஹிந்து வழிபாட்டு முறைகள் பின்பற்றப்பட்டு வருகின்றன. அதைப் பற்றித் தங்கள் கருத்து யாது?

பதில்: ஹிந்து ஆகமமுறைகளும்,வழிபாட்டுக் கிரியைகளும் மேலான தன்மை கொண்டவை; இயற்கையின் விதிமுறைகளை அனுசரிப்பவை. அனைத்துச் சமயத்தினரும் ஹிந்து வழிபாட்டு முறையைத் தாராளமாகப் பின்பற்றி மனதைத் தெய்வீக நிலைக்கு உயர்த்தி ஆன்மீக உணர்வில் திளைப்பதற்குப் பயன்படுத்தலாம். நாம் அதை மனமார வரவேற்கின்ருேம்.

இத்தாலிய கிறிஸ்துவப் பாதிரிகளுடன் நடந்த ஆன்மீக உரையாடலின் அடுத்த பகுதியில் சுவாமிஜி அவர்கள் "ஹிந்துவின் கண்ணேட்டத்தில் இயேசு" என்ற தலைப்பில் பேசினர். அதன் பின் கேள்வி-பதில் நிகழ்ச்சி அமைந்தது. அவரது பேச்சின் சாராம்சம் தரப்படுகின்றது.

இந்து மதம் தனிப்பட்ட நபர்களைப் பொறுத்து அமைந்தது கிடையாது. உயர்ந்த தத்துவங்கள் அதற்கு அடிப்படையாக அமைந்துள்ளன. ஒரு குறிப்பிட்ட மனிதரைப் பின்பற்ற வேண்டும் என்று ஆத்ம சாதகனுக்கு யாரும் விதிக்கக்கூடாது. ஆயின் அவன் கட்டாயம் தத்துவங்களைப் பின்பற்றி ஆக வேண்டும். அதுவே சரியான நெறி. இந்து மதம் ஆயிரக் கணக்கான சான்ருேர்களை உருவாக்கி உள்ளது. அவர்களின் பெருமை யாது? அடிப் படைத் தத்துவங்களை விட்டுச் சிறிதும் பிசகாமல் தெய்வீக நெறியைத் தம் வாழ்வில் கடைப் பிடித்தனர். அதன் மூலம் பெரிய நிலையை, இறைத்தன்மையை அடைந்தனர். உண்மையில் இயற்கையின் திட்டம் இதுவே. மனிதனை மாண்பு உள்ளவனுக, ஆன்மீகம் நிறைந்தவனுக மாற்றுவதே அதன் செயல்முறை.

பெரிய அண்டத்தை ஆராய்ந்து பார்த்தால், நமது உலகம் அதில் மிகவும் சிறிய துகள் என்பது புலப்படும். ஆயின் கிறிஸ்துவ மதமோ சில குறிப்பிட்ட ஆண்டுகளுக்கு முன்பு கடவுளால் சிருஷ்டிக்கப்பட்ட மிகவும் உயர்ந்த படைப்பு என்று உலகு கருதுகின்றது. இது சரியான கருத்து அன்று. இயற்கை என்பது 'சத்' பொருளின் புறவடிவு. இந்தப் புறத் தோற்றத்தில் நமது உலகிற்கு அதற்கு உரிய இடம் தரப்படுகின்றது. அவ்வளவே. மேலும் புறத்தோற்றமும், பிரளய அழிவும் இடைவிடாது நடந்து வரும் நிகழ்ச்சிகள். இவ்வண் மாறி அமையும் புறத்தோற்றத்தை (Phenomenon) வார்த்தைகளால் விளக்குவது வேதம். மாற்றம் இல்லாது இருப்பது சத்(Noumenon). அதை விளக்குவது வேதாந்தம். வேதத்தின் பல்வேறு கருத்துக்களைத் தற்கால விஞ்ஞானமும் ஏற்றுக்கொள்கின்றது.

வாழ்வைப் பரிணமிக்கச் செய்வது இயற்கை. இந்தப் பரிணமம் இடையருது நிகழ்ந்த வண்ணம் உள்ளது. உயிரினத்தின் கடைத்தரத்தில் துவங்கி, மேன்மேலும் உயர்ந்த தரத்தை அடைந்தவாறு பரிணமம் நிகழ்கின்றது. ஜீவன் அடையக்கூடிய பெரியநிலை கடவுளை உணர்ந்த ஞானியின் நிலையே. இந்த ஜீவன் முக்தி நிலையை ஒவ்வோர் உயிரும் என்ருவது ஒரு நாள் அடைந்தே தீரவேண்டும். ஆயின் அது படிப்படியாகப் பரிணமிக்க வேண்டும். 'அவதாரம்' என்பதோ வேறு விஷயம். ஒவ்வொரு காலகட்டத்தில் பரம்பொருளே மனித உரு எடுத்து இறங்கி (அவதார) வருகின்றது. அதுவே அவதாரம் ஆகும்.

ஹிந்து புராணம் அவதாரங்களை விளக்குகின்றது. இந்நிகழ்ச்சி என்ருே நடந்து முடிந்தது அன்று. என்றும் இடைவெளி இன்றி நடைபெறுவதே அதன் பெருமையாகும். நன்கு ஆராய்ந்தால் இன்றும் அதன் தத்துவத்தை

உணரலாம்.

பத்து அவதாரங்கள் என்பவை உயிரினத்தின் பரிணும அமைப்பு ஆகின்றன. தண்ணீர் இருக்குமிடத்தில் உயிர்த் தோற்றம் கட்டாயம் நிகழ்வதை நாம் அறிவோம். தண்ணீரில் வாழும் உயிர்வகைகள் அனைத்தையும் மத்ஸ்ய (மீன்) அவதாரம் என்று குறிக்கின்றோம். இரண்டாவது கூர்ம (ஆமை) அவதாரம். நீர், நிலம் இரண்டிலும் வாழும் சக்தி படைத்தவை இவை. ஆமை, முதலை, நண்டு, தவளை போன்றவை 'கூர்ம' அவதாரங்கள். மூன்றாவது வராஹம், காட்டுப்பன்றி. நிலத்தில் பெருமளவு வாழ்ந்தாலும், தண்ணீர் என்றால் அவை விசேஷமான விருப்பம் உடையவை. தண்ணிரில் ஆழ்ந்து கிடப்பதில் சுகம் பெறுபவை. கரடி, எருமை, யானை, காண்டாமிருகம் இப்பிரிவில் அடங்குகின்றன. நரசிம்ம அவதாரம் நான்காவது. மனிதனும், விலங்கும் சந்திக்கும் நிலை இது. அடுத்தது வாமனன். விலங்கு தன்மை முற்றிலும் மாறி மானிடத் தன்மை வெளிப்படுகின்றது. ஆயின் அது பொருந்திய விகிதத்தில் அமையாது. குறைவாக (குள்ளமாக) உள்ளது. பரசுராமர் ஆறாவது நிலை. தன்னுடைய கீழ் இயல்புகளை முற்றிலும் வெற்றி கொள்ளாத மானுடனை அந்நிலை குறிப்பிடும். ஏழாவது தசரத ராமன். தெய்விகத்தை வெளிப்படுத்தி, நிறை மனிதனை, புருஷோத்தமன், நரோத்தமன் என்று போற்றப்படும் அளவு பரிணும் வளர்ச்சி பெறுகின்றது. எட்டாவது ஸ்ரீ கிருஷ்ணன். பார்வைக்கு மானிடராய், பரிபூரணப் பொருளே உடல் தாங்கி மண்ணுலகுக்கு வந்துள்ளது. அவரை ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா என்று வழிபடுகின்றோம். எனக்குப் பிறவி இல்லை; அழிவு இல்லை. "அனைத்துயிரினங்களுக்கும் ஈஸ்வரன் நானே. எனினும் என்னுடைய பிரகிருதியை அடக்கி, என்னுடைய மாயையினால் அவதாரம் செய்கின்றேன்" என்று கீதையில் (IV–6.) அவர் கூறுகிறார். பகவான் புத்தர் ஒன்பதாவது அவதாரம். முறைப்படி சாதனை செய்தால் அனைவரும் ஆன்மீகத்தின் உச்சநிலையை அடையலாம் என்று அவர் புகட்டுகிறார். பத்தாவது அவதாரம் கல்கி. ஒவ்வொரு கால இடைவெளியில் தோன்றிய அனைத்தையும் அழித்து (பிரளயம்) அதன் பின் புதிய படைப்பை (சிருஷ்டி) அவர் துவக்குகின்றார்.

இயற்கையில் காணும் பரிணமத்திற்குப் புராண வடிவம் தந்து பத்து அவதாரங்களாகக் கூறுகின்றோம். ஒவ்வொரு நிலையிலும் மெய்ப்பொருள் தன்னை வெளிப்படுத்திக் கொள்கின்றது. எனவே ஒவ்வொரு நிலையையும் இறைவனின் தோற்றமாகப் போற்றி, வணங்கி, 'அவதார மூர்த்தியை' வழிபடுகின்றோம். மனிதனைப் பரிணமிக்கும் நிலையில் சரித்திர புருஷர்களையும் இதில் இணைத்துள்ளோம். ஸ்ரீ ராமர், ஸ்ரீ கிருஷ்ணர், புத்தர் ஆகியோர் புராண புருஷர்கள் அல்லர். அவர்கள் அனைவரும் ஒரு குறிப்பிட்ட ஆன்மீக உபதேசத்தை உலகிற்கு வழங்குவதற்கு எனக் குறிப்பிட்ட கால கட்டத்தில் அவதரித்தவர்கள். வேதாந்த தத்துவங்கள் அவர்கள் வாழ்க்கையில் செயல்படுத்தப்பட்டன. அவர்கள் அனைவரும் வாழ்ந்து காட்டிய அவதார மூர்த்திகள்.

ஸ்ரீ ராமன் பரமாத்மாவின் சொரூபம்; சீதை ஜீவாத்மாவின் உருவகம்; ஸ்ரீஹனுமான் ஆசாரிய ஸ்தானம் பெறுகின்றார். ராவணன், காமத்தினால் கெட்டு அலையும் மனதைக் குறிக்கின்றான்.

ஸ்ரீராமன், ராவண யுத்தம் இறைவன் அருளுக்கும், மனதின் அரக்கத் தன்மைக்கும் இடையே நடப்பது; இறுதியில் ஜீவாத்மாவின் சிற்றியல்புகளை இறைவன் அருள் வெற்றி கொள்கின்றது. இங்ஙனம் ஸ்ரீராமனின் அன்றாட ஜீவிதத்தைக்கொண்டு, சிறந்த வேதாந்த தத்துவங்கள் விளக்கப்படுகின்றன.

ஸ்ரீகிருஷ்ணனின் பால பருவ லீலைகள் இறைவனிடத்துக் காட்டப்படும் பக்தியின் வெளிப்பாடுகள் ஆகின்றன. "உலகம் என்பது ஒரு விளையாட்டு மைதானம்; உவகையுடன், உற்சாகத்துடன் விளையாடு; மனத்தளர்ச்சியோ, அக்கறை இன்மையோ, வேண்டாத வெறுப்போ இந்த விளையாட்டில் தலைகாட்டக் கூடாது" என்று ஸ்ரீ கிருஷ்ணன் உபதேசிக்கின்றார். உண்மையில் மகாபாரதப் போரின் கதாநாயகன் ஸ்ரீ கிருஷ்ணன். ஸ்ரீ கிருஷ்ணன் மனித குலம் அனைத்தையும் நல்ல நெறியில் எடுத்துச் செல்லும் சாரதி ஆகின்றார். ஸ்ரீ கிருஷ்ணன் வாழ்வு வேதாந்தத்திற்கு விளக்கமாகும்.

பூரணநிலை அல்லது நிறைநிலை

(ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள் 1983-ஆம் ஆண்டு தபோவனம் சக்திபூஜை அந்தர்யோகத்தில் நிகழ்த்திய சொற்பொழிவு)

ओं पूर्णमदः पूर्णमिदं पूर्णात्पूर्णमुदच्यते ।
पूर्णस्य पूर्णमादाय पूर्णमेवावशिष्यते ॥

ஓம் பூர்ணமத: பூர்ணமிதம் பூர்ணாத்
பூர்ணமுதச்யதே ।
பூர்ணஸ்ய பூர்ண-மாதாய பூர்ணமேவ
அவசிஷ்யதே ॥

தோற்றத்திற்கு அப்பால் இருப்பது பூரணம். பிரபஞ்சமாகத் தோன்றி வந்திருப்பது பூரணம். தோன்றி வந்துள்ள பூரணத்தை ஆராய்ந்து பார்க்கப் பார்க்கக் குறையிலா நிறைநிலையைக் காண்கின்றோம். தோற்றத்திற்கு அப்பால் இருப்பது நிர்க்குணப் பிரம்மம். தோற்றத்திற்கு வந்திருப்பதைச் சகுணப் பிரம்மம் அல்லது ஈஸ்வரன் என்று சொல்லுகின்றோம். சகுணப் பிரம்ம ஆட்சியில் உலகமும் உண்டு; ஜீவனும் உண்டு. இது மாயா விகாரம். இதில் ஒழுங்குப்பாடு அமைந்துள்ளது; தாறுமாறாக அமைந்தது அன்று. ஒழுங்குப்பாடு எத்தகையது? ஜீவர்களைப் பக்குவப்படுத்துவதற்கென்று ஒழுங்குப்பாடு அமைந்துள்ளது.

புல் பூண்டில் ஆரம்பித்த வாழ்க்கை படிப்படியாக மேல்நிலைக்கு வந்திருக்கின்றது. ஆரம்பதசையில் உள்ளதைப் புல் என்றும் பரிபூரணநிலையை எட்டியதைப் பிரம்ம தேவன் என்றும் சொல்வது வழக்கம். புல் முதல் பிரம்மாவரை என்று சொல்லுமிடத்து ஜீவர்கள் அனைவரும் அன்னை பராசக்தியின் மாயா விகாரங்களாக இருக்கின்றனர். அப்படி இருப்பதிலும் ஓர் ஒழுங்குப்பாடு உண்டு. பிரம்மாக்கள் மாறி மாறி வந்துகொண்டே இருக்கின்றார்கள். ஒரு பிரம்மா நெடுங்காலம் ஆண்ட பிறகு கிரமமுக்திக்குப் போகின்றார். கிரமமுக்திக்குப் போகின்றபொழுது அவரோடு ஜீவர்களும் சேர்ந்து கிரமமுக்திக்குப் போகின்றார்கள். அப்படி இருக்க, ஜீவர்களாகிய நம்மைப்பற்றிய ஓர் உண்மையை அறியவேண்டும். ஒரு ஜன்மத்தில் வாழ்க்கையை ஒரு போக்கில் முடிவுக்குக் கொண்டு வருகின்றோம். அடுத்த ஜன்மத்தில் எங்கு விட்டோமோ அங்கிருந்து தொடங்குகின்றோம்.

பள்ளிக்கூடத்தில் ஓராண்டு மாணவன் படித்த படிப்புக்கும் அடுத்த ஆண்டுப் படிப்பிற்கும் தொடர்வு இருப்பதுபோன்று ஒரு ஜன்மத்தில் வாழ்ந்த வாழ்க்கையின் தொடர்பு அடுத்த ஜன்மத்தில் வருகின்றது. இடையிலே பிரம்மாக்கள் சிலர் காலம் தாண்டிப் போயிருக்கலாம். ஆனால் அதைப்பற்றிய கவலை நமக்கு இல்லை. ஏனென்றால் தோன்றா நிலையில் கால அதீதத்தில் இருக்கின்றோம். தூங்குகின்ற மனிதன் தூக்கத்திலிருந்து விழித்தான பிறகு எத்தனை மணிநேரம் தூங்கினேன் என்று கணக்குப் பார்க்கின்றான். பொதுப்பட ஐந்து நிமிடம் தூங்கினால் போதாது. போதுமான அளவு தூங்கி ஓய்வு தருவது அவசியம்.

உடனே முளைக்கக் கூடிய நிலையில் உள்ள விதையும் இருக்கின்றது; காலக்கிரமத்தில் முளைக்கக் கூடியவையும் உள்ளன. ஜீவர்கள் பொதுப்பட மரணத்தின் மூலமாக ஓய்வு நிலையை அடைகின்றார்கள். அந்த ஓய்வு நிலை முடிந்தான பிறகு பொருத்தமான சூழ்நிலை வரும்பொழுது தோற்றத்திற்கு வருகிறார்கள். ஒரு பிரம்மாவின் காலத்தில் ஒரு ஜீவன் பிறக்கலாம். பத்துப் பிரம்மாவிற்குப் பிறகு இன்னொரு ஜீவன் பிறக்கலாம். இதில் ஒன்றும் வித்தியாசம் இல்லை. கால அதீதத்தில் காலம் கணக்கில் வருவதில்லை. ஆயினும் அந்தந்த ஜீவனுக்கு ஏற்ற சூழ்நிலை வருகின்றபொழுது அந்தந்த ஜீவன் தோற்றத்திற்கு வருகின்றான். வராதபொழுது ஜீவன் தூங்கிக்கொண்டு காத்துக் கிடக்கிறான். இது மாயையின் அதிசயம்.

நாம் செய்த செயல் ஒரு ஜன்மத்தோடு முடிந்து போகாது. தொடர்ந்து சரீரம் இருக்கும் பரியந்தம், மாயப் பிரபஞ்சத்தில் வாழும் பரியந்தம் வினைக்கு ஏற்ற வினைப்பயனை நாம் அனுபவித்துக்கொண்டே வருகின்றோம். ஆதலால் தான் தர்மத்தை விட்டுப் பிசகலாகாது. பிசகினால் நாம் நமக்குக் கேடுசெய்து கொண்டவர்களாவோம். தர்மத்தைப் படிப்படியாகக்

கையாளுவதின் மூலம் நாம் படிப்படியாக மேலே வந்து கொண்டிருக்கின்றோம். இப்படி வந்து கொண்டிருக்கின்ற ஜீவர்களுக்கு மனித நிலையை எட்டியான பிறகு, ஓர் அனுகூலம் வந்தமைகிறது. மானுட ஜன்மத்தில்தான் பிறப்பற்ற நிலையை அடையமுடியும். எத்துணை பிறவிகள் எடுத்தாலும் ஒரே போக்கில் அப் பிறவிகள் இன்பதுன்ப மயமாயிருக்கின்றன. பிறவி வேண்டாம் என்று சலிப்புத் தட்டுகின்ற அன்றைக்குத்தான் ஒருவன் ஆத்ம சாதனத் தைத் தொடங்குகின்றான்.

பிரபஞ்சத்தில் ஆசை இருக்கும் பரியந்தம் பிறவி பெருகிக்கொண்டே போகின்றது. ஆசைக்கு ஒரு முடிவு உண்டு. சிறு குழந்தைகள் பொம்மைகளை வைத்துக்கொண்டு விளையாடு வதில் ஆசைகொள்கிறது. ஒரு படித்தரம் வந் தான பிறகு அந்த ஆசை அடிபட்டுப் போகி றது. பிரபஞ்சத்தில் பற்று வைத்திருக்கும் அளவு ஆசை வளர்ந்து கொண்டேயிருக்கின் றது. ஆசையை அனுபவித்துப் பார்த்தான பிறகு இது வெறும் விளையாட்டு என்ற விரக்தி அல்லது ஆசையின்மை வருகின்றது. அன்றைக் குத்தான் நாம் ஞானமர்க்கத்திற்குத் தகுதி யுடையவர்கள் ஆகின்றோம். நசிகேதனுக்கு யமதர்மராஜா எவ்வளவு மையல் ஊட்டியும் அவன் ஆசைக்கு உட்படவில்லை. இந்த நிலை நமக்கு வரவேண்டும்.

இது எப்பொழுது சாத்தியம்? பிரபஞ் சத்தை அனுபவித்துப் பார்த்தான பிறகுதான் இது சாத்தியமாகும். ஜீவர்கள் எல்லாப் படித் தரங்களிலும் இருக்கின்றார்கள். பெரும்பான் மையோர் ஆசைக்கு உட்பட்டவர்கள். சிறு பான்மையினோர்தாம் ஆசையை வென்ற நிலை யில் இருக்கின்றார்கள். ஆசையை விசாரித் துப் பார்த்தால் அது பொருளற்றதாக விளங் கும். அப்பொழுது அவ் ஆசை தானாக நீங்கிப் போகும். ஆசையை முறையாக ஆராய்ச்சி செய்து பார்க்கின்றவிடத்து அதுவே ஆத்ம சாதனம். நாம் கொண்டுள்ள ஆசைகள் பல பொருளற்றவை. பொருளற்றவைகளைப் பொருளுற்றவைகளாக எண்ணி நாம் மயங்க லாகாது. ஆராய்ந்து பார்க்கப்பார்க்க நாம் கொண்டிருக்கும் ஆசை சிறு பிள்ளைத்தனம் என்பது விளங்குகின்றது. பிரபஞ்சம் எவ்வ ளவுதான் மையல் ஊட்டினாலும் அதில் ஆசை கொள்ளுதல்கூடாது.

தசரத குமாரர்கள் நால்வரும் நல்ல விவேகி கள். தங்களுக்கு ஏற்பட்ட கிருத்தியங்களைச் செய்தார்கள். ஆசைக்கு அந்நால்வரும் அடி மைப் பட்டவர்கள் அல்லர். அவர்கள் பெற்றி ருந்த பாங்கை நாமும் பெற வேண்டும். ஆசை அற்றிருப்பது என்பதன் பொருள் பிரபஞ்சத் தில் நாம் எதையும் செய்யக்கூடாது என்பது அன்று. ஆசையற்றவர்கள் தாம் பிறருக்கு உற்றவர்கள் ஆகின்றார்கள். சரீரம் இருக்கும் பரியந்தம் நிராசையில் நிலைத்திருந்து ஈசனு டைய கருவியாக இருப்பது நமக்குச் சாத்தி யம். இந்தமனப்பான்மையைப் பெறவேண்டும்.

நிராசையில் நிலைத்திருக்கின்ற ஜீவர்கள் இறைவனுடைய கிருத்தியங்களைச் செய் கின்ற நல்ல கருவிகளாக அமைகின்றார்கள். தாங்கள் எடுத்துக்கொண்ட காரியம் பூர்த்தி யான பிறகு முக்தி அடைகின்றார்கள். முக்தி என்றால் என்ன? சொரூபத்தில் நிலைத்திருப் பதுதான் முக்தி. தனக்குத்தான் செய்து கொண்ட ஜீவ வியக்தியை ஒழித்துத் தள்ளு வது முக்தி. கற்பூரத்தை எரிப்பதன் மூலமாக இது காட்டப்படுகின்றது. சுத்தமான கற்பூரம் எரிந்தால் தட்டில் கரியையோ சாம்பலையோ காண முடியாது. அங்ஙனம் சுத்த முக்தனிடத் தில் ஜீவ வியக்தி பாக்கி இருப்பதில்லை. "வான் கெட்டு ....தன்மையனுக்கு" ஐம்பூதங் களையும் ஒடுக்கி நம்மைக் கொடுக்கும்பொழுது நம்மில் நாமாக இருக்கின்றோம். ஜீவ வியக் தியை ஆராய்ந்து பார்த்தால் அது கற்பூரம் எரிந்து போன பிறகு ஒன்றுமில்லாததை ஒக் கும். ஜீவ வியக்தியை ஆராய்ந்து பார்த்துப் பரமஹம்சர் அற்புதமாகச் சொன்னார். உன் னுடைய வியக்தியை ஆராய்ந்து பார். அது வெங்காயத்துக்கு நிகர். ஒவ்வொரு சருகாக வெங்காயத்தில் உரிகின்றது. சருகு உரிய உரியக் கடைசியில் வெங்காயம் என்ற சொல் லுக்கு இலக்காக ஒன்றும் இல்லை.

பிரபஞ்சத்திலுள்ள அனைத்தையும் ஒவ் வொன்றாக ஒதுக்கி வைத்துவிட்டால் ஜீவர் களாகிய நம்மிடத்துப் புதிதாக ஒன்றும் இல்லை. வியாபாரத்தில் என்ன லாபம் என்றால் ஈரவெங்காயம் என்பார்கள். அதன் பொருள்

லாபம் ஒன்றும் இல்லை என்பதாகும். வெங்காயத்தை உரித்துக்கொண்டே போனால் சருகாகப் போகின்றது. உலகத்தில் வாழ்வு என்ற விவகாரம் செய்கின்ற நாம் வெங்காய நிலையில் இருக்கின்றோம். ஆதலால் எதைத் துறப்பது? நம்முடைய ஜீவிதத்தைத் தான் துறக்க வேண்டும். சொருபத்திற்கு என்றுமே பழுது இல்லை. என்ன பாங்கில் துறக்க வேண்டும்? 'யான் எனது என்னும் செருக் கறுப்பான் வானோர்க்கு உயர்ந்த உலகம் புகும்' என்பது மறைமொழி. யான் எனது எல்லாவற்றையும் அவன் மயமாக்கி அவனிடம் ஒப்படைத்துவிட்டால் 'நன்றே செய்வாய் பிழை செய்வாய் நானோ இதற்கு நாயகமே!' என்னும் நிலை உண்டாகிறது. அது சிறந்த மனநிலை ஆகும்.

தியாகம் என்பது சோம்பித் திரிவது அன்று. விவேகானந்தர் சொல்லுகின்றார். "பேனா கத்தி ஒன்று துருப்பிடித்துப் போகிறது. மற்றொன்று தேய்கிறது. தேய்வது சிறந்தது. துருப்பிடித்துப் போகலாகாது." நம்முடைய ஜீவிதம் பயன்படுகின்ற பாங்கில் தேயவேண்டும். துருப்பிடித்துப் போகின்ற பாங்கில் நம் வாழ்வு வீணாகிவிடக்கூடாது. மாயப் பிரபஞ்சத்தில் வாழ்ந்து வருகின்ற நாம் பிரபஞ்சம் வெறும் கனவு என்று செயலற்று இருக்கக்கூடாது. நம்முடைய ஜீவிதம் இருக்கும் பரியந்தம் இறைவனுடைய விளையாட்டில் கலந்துகொள்ளவேண்டும். நம் ஜீவிதம் பயன்பட்டுக்கொண்டே இருக்கவேண்டும்.

ஒவ்வொரு அவதார மூர்த்தியும் இந்து மதத்தின் யுக தர்மத்தை நிலைநாட்ட வந்துள்ளார்கள். இந்தக் காலத்தில் தோன்றிய ஸ்ரீ ராமகிருஷ்ணர் பஞ்சமகாயக்ஞத்தில் நரயக்ஞத்தை எடுத்துக்கொண்டார். மனிதனை மனிதன் பெருமைப்படுத்துவது சிறந்த ஆத்ம சாதனம். தாமே அந்தச் சேவையைச் செய்தார். எந்தச் சாஸ்திரத்திலும் தீண்டாமைக்கு ஆதாரமே இல்லை. இராமாயணத்தில் எந்த இடத்திலாவது தீண்டாமைஇடம் பெறுகிறதா? என்றால் இல்லை என்றுதான் சொல்லவேண்டும். மகாபாரதத்திலும் தீண்டாமை இடம்பெறவில்லை. உபநிஷதங்கள், வேதங்கள் இவைகளில் தீண்டாமையை ஆராய்ந்து பார்த்தால் அவைகளிலும்இல்லை. ஏதோ ஓர் போக்கில் மனிதனை மனிதன் தீண்டலாகாது என்ற நோய் நம் நாட்டைப் பிடித்திருக்கிறது.

பரமஹம்சர் பிறந்த நாள் முதல் கொண்டு அவர் அந்த நோயில் அகப்படக் கிடையாது. 'நீ தீண்டத்தகாதவன்' என்ற வார்த்தை அவர் வாயில் வந்தது இல்லை. நரயக்ஞத்தைச் சாதனையாகச் செய்தார். "தாயே! உலகத்தவரால் ஒதுக்கப்பட்ட இவர்களும் உன்னுடைய குழந்தைகள். இவர்களைத்தீண்டத்தகாதவர்கள் என்று சொன்னால் நான் என்னுடைய அகங்காரத்தை வளர்க்கிறேன். நான் உனக்கு வேற்றான் ஆகின்றேன்." 'சத்யமேவ ஜயதே." என்பது நம்முடைய லக்ஷியம். தீண்டாமை ஒரு நாளும் சத்தியமன்று. சத்தியத்தைப் பின்பற்றாதவன் ஒரு நாளும் முன்னேற்றம் அடைய மாட்டான். நம் நாடு இன்னமும் முன்னேற்றம் அடையாததற்குக் காரணம் தீண்டாமை என்ற நோய் நம் நாட்டில் இருப்பதாகும். பரமஹம்சர் அந்த நோய்க்கு உட்படாதிருந்தார். அந்த நோயைத் தம் மனத்தினின்று அகற்ற இரவில் சேரிக்குச் சென்று அதைச் சுத்தம் செய்தார். பரமஹம்சர் தம்மனதைச் சுத்திசெய்வதற்காகச் சேரிக்குச்சென்று தன்னந்தனியாகச் சேரியைச் சுத்தம் செய்வதைச் சாதனையாகச் செய்தார். தம்மை விளம்பரப்படுத்திக் கொள்ளவில்லை. தமக்கு உபத்திரவத்தையும் தேடிக்கொள்ளவில்லை. சாதனத்தில் கண்ணும் கருத்துமாக இருந்தார். அவர் செய்தது ஒரு சிறந்த பாடமாக நமக்கு அமைகின்றது. மனதில் குறைநிலை இருக்கும் வரையில் பேத புத்தி இருந்து கொண்டே இருக்கும். உயர்வு தாழ்வு என்பது அப்பொழுது மனதில் இடம் பெறுகிறது. ஸ்ரீராமகிருஷ்ணர்போன்று மனதிலுள்ள குறை நிலையை நாம் அகற்றும்பொழுது எங்கும் ஈசனைக் காணும் நிறைநிலை உண்டாகிறது. நிறை நிலையில் இருப்பவர் கடவுள். நாம் நிறை நிலையை அடையும்பொழுது நாம் பூரணப் பொருளாகிய தெய்வமாகின்றோம். எழுமின், விழிமின், குறிசாரும்வரை உழைமின் என்பது சுவாமி விவேகானந்தர் வாக்கு. இங்குக் குறி என்று குறிப்பிடுவதன் மூலம் பூரணநிலையையே குறிப்பிடுகின்றார். பூரண நிலையை யடைய ஊக்கத்துடன் உழைப்போமாக.

மீராபாய் சரிதம்

பக்தர்களும் பக்திமதிகளும் பகவான் மீது அளவுகடந்த பக்தி கொள்கின்றனர். பகவான் அவர்களுடைய பக்தியைச் சோதிப்பதற்காக இன்னல்கள் பல உண்டு பண்ணுகின்ருர். இன்னல்கள் வரவரப் பக்தர்களுக்குப் பகவான் திருவடிகளில் பக்தி அதிகரித்துக்கொண்டே வருகிறது. பக்தியைத் தடை செய்வதில் இன்னல்கள் தோல்வி அடைகின்றன. பகவானுடைய தாள்களைப் போற்றி வாழ்வை இன்ப மயமாக அமைத்துக்கொள்வது பக்தர்களுடைய பாங்காகும். பக்திமதி மீரா இதற்கு விலக்கு ஆனவள் அல்லள். மீராவின் சரீரத்தையும் அவள் கண்ணன்பால் கொண்டிருந்த பக்தியையும் ஈண்டு எண்ணிப் பார்த்து நம் உள்ளத்தில் மறைந்துகிடக்கும் பக்தி உணர்வை வெளிப்படுத்த முயல்வோம்.

நம் பரத கண்டம் ஆன்மீகச் செல்வத்தை உடையது. சிற்சில சமயங்களில் இங்குப் பக்தி வெள்ளம் கரைபுரண்டோடி இருக்கிறது. உதயபுரம் என்னும் பட்டணம் பண்டைக் காலத்தில் பாண்டவர்களோடு தொடர்பு உடையதாக இருந்தது. அப்பட்டணத்தை முன்பு பூநாயகன் என்னும் பெயருடைய ஓர் அரசன் ஆண்டு வந்தான். அவன் குடிகளின் நலன்களையே கருத்தில் கொண்டு குடிகளுக்கு அவ்வப்போது செய்ய வேண்டிய காரியங்களை முறையாகச் செய்து வந்தான். மக்கள் அந்நகரத்தைத் தெய்வலோகமென்றும், பூநாயகனை இந்திரன் என்றும் வாழ்த்தி வணங்கி மகிழ்வுற்றிருந்தனர். மக்களின் அன்புக்குப் பாத்திரமான மன்னனுக்கு மதிமுகி என்னும் மாண்புடைய பெண் மனைவியாக வாய்த்திருந்தாள். அம்மாதரசி அழகிலும், குணத்திலும், தெய்வ பக்தியிலும், கல்வி கேள்வியிலும், தர்ம சிந்தனையிலும் தனக்கு நிகர் யாருமில்லை யென்று சொல்லும் படியாக வாழ்ந்து வந்தாள். உத்தம சதிபதிகளான மதிமுகியும், பூநாயகனும் பகவன் நாம உச்சாரணையில் ஈடுபட்டுச் சத்காரியங்களைச் செய்து இல்லற வாழ்க்கையை இன்பமுடன் நடத்தி வந்தனர். பக்தியையும் பரநலத்தையும் குறிக்கோளாகக் கொண்டிருந்த அரசன் பூநாயகன் கனவில் பகவான் தோன்றி பக்தியில் சிறந்த ஒரு பெண்குழந்தையை உங்களுக்கு மகப்பேருக அருளத் திருவுளம் கொண்டுள்ளோம் என்று கூறி மறைந்தார். தான் கனவில் கண்ட செய்தியைக் கனவிலிருந்து மீண்டதும் தன் கற்புடைய மனைவி மதிமுகியினிடம் அரசன் கூறினன். அவள் ஆண்டவனின் கருணையை நினைத்து அளவற்ற ஆனந்தம் அடைந்து ஆண்டவனைத் தியானிக்கலானுள். அன்று முதல் அவள் உள்ளத்தில் மேலும் பகவானிடத்தில் பக்தி வளரலாயிற்று.

இறைவனின் இச்சைப்படி மதிமுகி கருவுற்றுப் பத்துமாதம் நிரம்பியதும் ஓர் அழகிய பெண் மகவை ஈன்ருள். அக்குழந்தைக்கு மீராபாய் என்னும் நாமம் சூட்டிப் பெற்ருேர்கள் அருமையுடன் வளர்த்து வந்தனர். நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து மீராபாய் ஐந்து வயதைப் பூர்த்தி செய்தாள். முறைப்படி அவளுக்கு அக்ஷராப்பியாசம் செய்யப்பட்டது. அவளுடைய அறிவை விசாலப்படுத்தும் படியான கல்வி அவளுக்குத் தரப்பட்டது. மீராபாய் அதி நுட்பமான அறிவு படைத்திருந்தாள். தனக்குப் புகட்டியதைத் தாமதமின்றிக் கிரகித்துக் கொண்டு சகல கலைகளிலும் வல்லவளானுள். அவளுடைய அறிவுத்திறமையைப் பாராட்டியவர்கள் அவளைச் சரஸ்வதி தேவியின் அம்சமென்று நினைத்தனர். அறிவை விசாலமாகச் செய்து கொண்டதோடு அவள் இதயத்தில் அன்பையும் பெருக்கி வந்தாள். சங்கீதத்தில் மிகவும் தேர்ச்சி அடைந்தவளாக இருந்தாள். இனிய சாரீரத்தைக்கொண்டு பகவான் மீது சதா கீர்த்தனைகளைப் பாடி பக்தியை வளர்த்து வந்தாள். பெற்ருேர்கள் வாழ்க்கை முறை அவளுடைய பக்தியை மேலும் வளர்த்து வந்தது. அரசன் கன்னிகாமாடம் கட்டி அதில் மீராபாயையும், அவளுடன் சில தோழிகளையும் இருக்க அனுமதித்தான்.

மானுட வாழ்வின் பயன் ஈசனிடத்துப் பக்தியை வளர்ப்பதாகும். மானுடப் பிறப்பு எடுத்த மீராபாய் அந்த லக்ஷியத்துக்கு ஏற்பக் கன்னிகாமாடத்திலிருந்துகொண்டு கண்ணன் திருவடித் தாமரையை நினைந்து நினைந்து பக்

திப் பரவசத்தில் இருந்துவந்தாள். பக்தியில் ஐந்துவகை உண்டு. தாஸ்ய பாவனை, சக்கிய பாவனை, வாத்சல்ய பாவனை, மதுர பாவனை, சாந்த பாவனை என்பன அவ் ஐந்துமாகும். ஈசனை எஜமானனாகவும் தன்னை அவருடைய வேலையாளாகவும் பாவித்துப் பக்தியை வளர்ப்பது தாஸ்யபாவனையாகும். அப்பர் சுவாமிகளும், ஆஞ்சநேயரும் பூண்டிருந்த பக்தி இதற்குச் சான்றாகும். ஈசனை நண்பனாகப் பாவித்துப் பக்தி கொள்வது சச்ய பாவனையாகும். சைவ சமய ஆச்சாரியர்களுள் சுந்தரமூர்த்தி நாயனாரும், பிருந்தாவனக் கோபாலர்களும் கோபிகளும் பூண்டிருந்த பக்தி சக்யபாவனைக்குச் சான்றாகும். கடவுளைத் தம் குழந்தையாகப் பாவித்து அவரிடம் பக்தி கொள்வது வாத்சல்ய பாவனையாகும். பாலராமனையும், பாலகிருஷ்ணனையும் அவர்களுடைய பெற்றோர்கள் பாராட்டி வளர்த்தது இதற்குச் சான்றாகும். இறைவனைத் தன் நாயகனாகப் பாவித்து இறைவன் மீது பக்திகொள்வது மதுரபாவனையாகும். ராதை கிருஷ்ணனையும்; ஆண்டாள் அரங்கநாதனையும், மாணிக்க வாசகர் சிவபெருமானையும் இம்முறையில் பக்தி செய்து அடைந்தனர். ஈண்டு மீராபாய் கண்ணனை நாயகனாக அடையவேண்டுமென்று எண்ணி மதுரபாவனையின் மூலம் கண்ணனிடம் பக்தி செலுத்தி வந்தாள். உலகரீதியில் கணவன் மனைவியின்மீதும், மனைவி கணவன் மீதும் கொள்கின்ற அன்பு உடலை ஒட்டியதாகும். அந்த அன்பிலிருந்து உள்ளத்தில் காமம் உருவெடுக்கிறது. அக்காமம் பக்திக்கு இடைஞ்சலாகும். ஆனால் மீராவுக்குக் கண்ணனிடத்து எழுந்த அன்பு உடல் உணர்வைக் கடந்ததாகும். காமத்துக்கு ஆங்குச் சிறிதளவும் இடமில்லை. காம உணர்ச்சி ஆங்குக் கடவுள் மீது பக்தி உணர்ச்சியாக வடிவெடுக்கிறது. மீராவின் உள்ளத்தில் கண்ணன் மீது எழுந்த ஆசை அவளை உடலை மறந்து பரவச நிலையை அடையும்படி செய்தது. அவள் சிற்சில சமயங்களில் பரவச நிலையில் இருந்துகொண்டு பகவானோடு உரையாடுவாள். உடனிருந்த தோழிகள் அவளுடைய மனநிலையைப் புரிந்து கொள்ளாது அவள் உள்ளத்தில் யாரோ புகுந்துவிட்டார்கள் என்று எண்ணி அரசியிடம் சென்று மீராபாயைப் பற்றித் தவறான கருத்துக்களைத் தெரிவித்தார்கள். அவர்கள் கூறியதைக் கேட்ட அரசி மதிமுகி தன் மகளுக்குத் தக்க வரன் தேடி மணம் முடித்து வைக்க நினைத்தாள்.

மதிமுகி தன் கணவன் பூநாயகனிடம், "நாதா! நம் குழந்தையைக் கன்னிகாமாடத்தில் விட்டுவிட்டு அவளைப்பற்றி நாம் நினையாதிருப்பது சரியன்று. அவள் உலக சுகத்தை அனுபவிக்க ஆசைகொண்டிருப்பதாகத் தோழிகள் மூலம் அறிந்தேன். எனவே விரைவில் அவளுக்கு மணம் முடித்து வைத்துவிடுவது நல்லது" என்றாள். "நான் மீராபாய் விஷயத்தில் சிரத்தை கொண்டிருக்கின்றேன். அவளுக்குத் தக்க வரனைத் தேடுவதில் ஈடுபட்டுள்ளேன். அழகு, குணம், கல்வி, ஆகிய அனைத்திலும் உயர்வாக விளங்கும் நம் மகளுக்கு ஏற்ற வரன் கிடைப்பது கஷ்டம் எனினும் தக்க வரனைக்கண்டு பிடிப்பதற்கு வேண்டிய ஏற்பாடு செய்துள்ளேன். நீ அதைப்பற்றிக் கவலைப்படவேண்டியதில்லை. நாம் இப்பொழுதே கன்னிகாமாடத்திற்குச் சென்று நம் மகளுக்கு நம் முடிவைத் தெரிவிப்போம்" என்று பூநாயகன் கூறினான்.

இருவரும் கன்னிகாமாடத்திற்குச் சென்று மீராபாயைச் சந்தித்தனர். பூநாயகன் மீராபாயைப் பார்த்து, "குழந்தாய் உன் தாய் மூலம் உன் மன நிலையை நான் அறிந்தேன். உனக்குத் தக்க வரன்தேடி மணம் முடித்து வைத்து நாங்கள் மகிழ்ச்சியடைய விரும்புகின்றோம். உன்னுடைய விருப்பத்தைத் தெரிவிப்பாயாக" என்றார். மீராபாய் தான் கைப்பட எழுதிய படம் ஒன்றைக்கொண்டு வந்து தந்தையின் கையில் கொடுத்து நாணத்துடன் நின்றாள். மீராதேவி தீட்டிய படத்தில்ஸ்ரீ கிருஷ்ணனும் அவளும் இருப்பதைத் தந்தை கண்டார். தந்தை மீராபாயைப் பார்த்துப் பகர்ந்ததாவது: "கண்மணி! உனக்கு ஸ்ரீ கிருஷ்ணனை மணந்துகொள்வதில் விருப்பம் உள்ளதை அறிந்தேன். ஆனால் அது நடக்கக் கூடிய காரியமா? மானுடப் பிறப்பெடுத்திருக்கும் நீ அகில லோகநாயகனைக் கணவனாகப் பெறுவதெப்படி? எனவே அந்த எண்ணத்தை விட்டு விட்டு உனக்குப் பிரியமான ராஜ

குமாரன் ஒருவனை மணம் புரிந்துகொள்'' என்றார். அதற்கு மீராபாய் பகர்ந்ததாவது: "நான் ராதாகிருஷ்ணனை எழுத முற்பட்டேன். ஆனால் அப்படத்தில் ராதாவுக்குப் பதில் என் வடிவம் தற்செயலாய் அமைந்துவிட்டது. அப்படி அமைந்தது பகவானின் திரு உள்ளம் என்றே நினைக்கின்றேன். என் உள்ளமும் அவரையே பதியாக அடைய வேண்டுமென்று எண்ணுகிறது. கண்ணனுக்கே என்னை மணம் செய்ய முயல்வீராக. இதற்கு நீங்கள் சம்மதிக் காவிடில் நான் இவ்வுலகில் வாழ்ந்திருக்க விரும்பவில்லை'' என்றாள். மீராவின் பக்தி உள்ளத்தைக் கண்டு தந்தை மகிழ்ச்சியடைந் தான். ஆனால் பகவானுக்கு எவ்வாறு தன் மகளை மணம் முடித்துக் கொடுப்பது என்ற விஷயந் தான் விளங்கவில்லை என்றார். அதற்கு மீரா பகர்ந்ததாவது: "தந்தையே! நீங்கள் கவலைப் படவேண்டாம். பக்தர்களின் இச்சையைப் பகவான் பூர்த்தி செய்து வைப்பார். என் உள்ளத்தின் பாங்கை அவர் அறிந்து அதற் கேற்ற முறையில் அவர் அருள் புரிவார்'' என்று கூறினாள். தந்தை பூநாயகன் தாம் இதுகாறும் ஆராதித்து வந்த கிருஷ்ண விக்ர கத்தை மீராபாயிடம் கொடுத்து "உன் விருப் பம் போல் நீ விரும்பும் கண்ணனை ஆராதித்து ஆனந்தம் அடைந்திருப்பாயாக'' என்று கூறினான். மீராபாய் மகிழ்ச்சியுடன் அக் கிருஷ்ண விக்ரகத்தை வாங்கிக் கொண்டாள். தந்தையும் தாயும் மகிழ்ச்சியுடன் மீராபாயிட மிருந்து விடைபெற்றுக்கொண்டு தங்கள் இருப்பிடம் சென்றார்கள்.

தந்தையிடமிருந்து பெற்ற கிருஷ்ண விக்ர கத்தைப் பக்தியுடன் நாள்தோறும் மீராபாய் பூஜித்து வந்தாள். கண்ணனுடைய திவ்ய திருநாமங்களை வீணை கானத்துடன் பாடிப் பரவசமடைந்து வந்தாள். பரமனை வழிபடுவதி லும், பரமனுடைய அடியார்களை வணங்கி உபசரிப்பதிலும் அவள் மகிழ்ச்சி அடைந் தாள். ஆண்டவனையும் அடியார்களையும் உப சரித்து வழிபாடு செய்வது நல்ல ஆத்ம சாதனை யாகும் என்பதை மீராபாய் உணர்ந்து இருந் தாள். எனவே ஆண்டவனுடைய அடியார் களை அன்போடு அழைத்து அவர்களுக்கு உணவு பரிமாறி அவர்கள் உண்டபின் இலையைத் தானே எடுத்துச் சாப்பிட்ட இடத் தைச் சுத்தம் செய்து மகிழ்ச்சி அடைவாள். அடியார்களுடன் சேர்ந்துகொண்டு பஜனை செய்தும் ஆடியும் பாடியும் பக்தி பரவசத்தில் ஈடுபட்டிருந்தாள். ஆனால் பொது மக்களுக்கு மீராபாய் பெற்றிருந்த மனநிலை விளங்கவில்லை. மீராபாயின் செயல்களை அவர்கள் பொருந்தாத செயல்கள் என்று எண்ணினர். "ஓர் அரச குமாரி பிறர் சாப்பிட்ட எச்சில் இலையை எடுப்பது எப்படிப் பொருந்தும்? கன்னிப் பெண்ணாகவிருக்கும் மீராபாய் ஆடவர்களுடன் சேர்ந்துகொண்டு ஆடுவதும் பாடுவதும் அவ ளுக்கு அழகாகுமா? பெண்களுக்குரிய அச் சம், மடம், நாணம், பயிர்ப்பு ஆகிய நான்கு குணங்களையும் இழந்து தன் இஷ்டப்படி ஆடவர்களோடு பேசுவதும் அவர்களை வணங்கு வதும் அழகாகுமா? அங்ஙனம் அவள் நடந்து கொள்வதால் அவளுடைய கற்புக்குப் பங்கம் வராமல் இருக்குமா? மீராபாய் இப்படி நடந்து கொள்வதைக் கண்டிக்காது அரசனும் அரசி யும் வாளா இருக்கின்றார்களே? இது என்ன விந்தையாக இருக்கிறது!'' என்று பொதுமக் கள் தங்களுக்கிடையில் பேசிக்கொண்டனர். அப்படி அவர்கள் பேசிக்கொண்ட செய்தி அரசனுடைய காதுக்கும் எட்டியது. அச் செய்தி அரசனுடைய உள்ளத்துக்கு வருத்தம் தருவதாக இருந்தது. என்ன செய்யலாம் என்று அரசன் சிந்தித்துப் பார்த்தான். இறுதி யில் கன்னிகா மாடத்துக்குச் சென்று மீரா பாயைக் கண்டு "மீரா! உன்னை நான் புதல்வி யாக அடைந்ததன் பயனா இது? நீ உன் மனம் போனபடி வேற்றாருடன் பழகுவது பொருந்துமா? நீ ஓர் அரசகுமாரி என்பதை மறந்து, கன்னிப்பருவத்தில் இருக்கிறாய் என் பதையும் மறந்து ஆடவர்களோடு பழகி வரு கின்றாய். உன் செய்கை என் வம்சத்துக்கும் எனக்கும் அவமானத்தையும் பழியையும் தருவதாக இருக்கின்றது. இனிமேல் நீ இங் ஙனம் நடந்துகொள்ளக் கூடாது. நீ பகவன் நாமம் பஜனை செய்வதை நாங்கள் முற்றிலும் ஆமோதிக்கின்றோம். நீ உனக்கு விருப்பமான ராஜகுமாரன் ஒருவனை மணந்து கொண்டு நீ பஜனையிலும் பக்தியிலும் ஈடுபட்டுவா'' என்று அரசன் கூறினான். (தொடரும்)

ஆத்திச்சூடியில் ஆன்மீகம்

(76 ஆம் பக்கத் தொடர்ச்சி)

விசுவாமித்திரர் தசரதன் அரசசபைக்கு வருகின்ருர். தாம் செய்யப்போகும் வேள்விக்குத் துணைபுரிவதற்கு ராமன் வேண்டும் என்று தசரதனைக் கேட்கின்ருர். தசரதன் ராமனுக்குப் பதில் தாமே வந்து வேள்வி காப்பதாகக் கூறி ராமனை அனுப்பத் தயங்கினன். வசிஷ்டர் தலையிட்டு 'மன்ன! விசுவாமித்திரருடைய விருப்பப்படி அவருடைய யாகத்தைக் காப்பதற்கு ராமனை அனுப்பிவைப்பாயாக. ராமனுக்கு ஒரு தீங்கும் வந்துவிடாது. எல்லாம் நலமாகமுடியும்'' என்ருர். தசரதனும் ராமனை ஆசீர்வதித்து விசுவாமித்திரருடன் அனுப்பி வைத்தான். வழியில் தாடகை என்னும் அரக்கியை விசுவாமித்திரருடைய ஏவலினல் கொன்று தள்ளுகின்ருன். விசுவாமித்திரர் வேள்வி முடிந்ததும் மிதிலைக்குப் போகும் வழியில் கல்லாகக் கிடந்த அகல்யை என்பவளைப் பெண்ணகப் பழைய நிலையை அடையும்படி செய்கின்ருன் ராமன். தீயோர்களை அழிப்பதும், நல்லார்களைக் காப்பதும் ராமாவதாரத்தின் அறமாகும். ராமன் அதை எல்லா நிலையிலும் செய்து வருகின்ருன். மிதிலையில் ராமனுக்கும் சீதைக்கும் மணமான பின்பு விசுவாமித்திரர் ராமகாதையிலிருந்து விலகிக்கொள்கின்ருர். தாம் செய்யவேண்டிய கடமை நிறைவேறியதும் விசுவாமித்திரர் ராமனிடமிருந்து விடைபெற்றுக்கொள்கிருர். நாம் ஒவ்வொருவரும் உலகுக்குச் செய்யவேண்டிய கடமை பூர்த்தியானதும் அதிலிருந்து விலகிக்கொள்ளுதல் வேண்டும். குழந்தை ஒன்று தக்க வயது வரும்வரையில் தாயைச் சார்ந்திருப்பது குழந்தையின் அறமாகும். தன்னைத்தானே காப்பாற்றிக்கொள்ளும் சக்தி வரும்பொழுது அது தாயைச் சார்ந்திருக்கக் கூடாது. தன்னைக் காத்துக்கொள்ளும் சக்தி வந்ததும் ஒருவன் யாரையும் சார்ந்திருக்கக் கூடாது. தன்னம்பிக்கை உடையவனக வாழவேண்டும். "தெய்வ நம்பிக்கை இல்லாதவனை நாஸ்திகன் என்று பழைய மதங்கள் கூறுகின்றன. தன்னிடத்தில் நம்பிக்கை இல்லாதவனை நாஸ்திகன் என்று புதிய மதங்கள் கூறுகின்றன." இங்ஙனம் விவேகானந்தர் பகர்கிருர். தன்னம்பிக்கைகொண்டிருத்தல் அறத்தின் ஒரு பகுதியாகும். 'அறஞ்செய விரும்பு' என்ருல் தன்னம்பிக்கை உடையவனக இருக்க விரும்பு என்று பொருள்கொள்வது வாழ்க்கையில் முன்னேற உதவும்.

ராம காவியத்தில் வரும் அனைவரும் தத்தம் கடமைகளை முறையாகச் செய்து முடிப்பதில் விருப்பம் உடையவர்களாக இருந்தார்கள். பதினன்கு ஆண்டுகள் உண்ணுது உறங்காது ராமசேவையில் இன்புற்று இருந்தான் லக்ஷ்மணன். பதினன்கு ஆண்டுகள் தவக் கோலத்தில் இருந்துகொண்டு ராமன் ஒப்படைத்த ராஜ்யப் பொறுப்பைச் சிறப்பாகப் பற்றற்று நிறைவேற்றி வந்தான் பரதன். ராம சிந்தனை, ராம நாம ஜபம், ராம கைங்கர்யம் ஆகிய இவற்றைத் தவிர வேறு ஒன்றையும் அறியாதவனக ஆஞ்சநேயன் தன் முக்கரணங்களையும் முகுந்தனிடத்தில் கொடுத்திருந்தான். அல்லும் பகலும் அனவரதமும் உள்ளத்தால் துதி செய்வது சீதாபிராட்டியின் தர்மமாக அமைந்திருந்தது. இங்ஙனம் யார் ஒருவன் பரத்துக்காகத் தன்னை ஒப்படைக்கின்ற அறச் செயலை விரும்புகின்ருனே அவன் 'அறஞ் செய விரும்பு' என்னும் ஆத்திச்சூடியை அனுபவத்துக்குக் கொண்டு வந்தவனகின்ருன்.

"நல்லவர்களைக் காப்பதற்கும் தீயவர்களை அழிப்பதற்கும், அறத்தைக் காப்பதற்கும், தர்மத்தை நிலை நாட்டுவதற்கும் நான் யுகந்தோறும் பிறப்பு எடுத்து வருகிறேன்'' என்று கண்ணன் கூறுகின்ருர். கிருஷ்ணவதாரத்தில் இதை அவர் நிரூபித்துக் காட்டுகின்ருர். தர்ம நெறியில் சென்ற பாண்டவர்களைக் காப்பதிலும், அதர்ம நெறியில் சென்ற கௌரவர்களை அழிப்பதிலும் கண்ணன் ஈடுபட்டிருந்தார். கம்சன், சாணூரன், சிசுபாலன், ஜராசந்தன், போன்ற துஷ்டர்களை அழிக்கின்ற தர்மத்திலும் ஈடுபட்டிருந்தார். வாழ்க்கையை ஒரு விளையாட்டாக நடாத்தி வந்தார். மலையைக் குடை பிடித்தும், காளிங்கன் என்ற நச்சுப்பாம்பைக் கொன்றும் மக்களுக்கு வந்த

இடையூறுகளை எல்லாம் அகற்றி வந்தார்.

தர்ம நெறியில் செல்லுகின்றவர்களுக்குச் சோதனைகள் பல வருவதுண்டு. அச்சோதனைகளையெல்லாம் வெல்லுபவனே தர்மநெறியைக் கடைப்பிடிக்க முடியும். வல்லவன் ஒருவனே அறம் செய்வதற்கு அருகதை உடையவன் ஆகிறான். சத்தியத்தைக் கடைப் பிடித்த ஹரிச்சந்திரனுக்கு எத்தகைய சோதனைகள் வந்தன என்பது நமக்குத் தெரியும். சத்தியத்தின் பொருட்டு ராஜ்யத்தையே அவன் இழக்க வேண்டி வந்தது; மனைவியையும் மக்களையும் இழக்கவேண்டி வந்தது; தன்னையே பிறர்க்கு அடிமைக்கு விற்க வேண்டி வந்தது. எல்லாவற்றையும் இழக்க நேரினும் சத்தியத்தை மட்டும் அவன் விடாது கடைப்பிடித்தான். இறுதியில் தாம் இழந்த ராஜ்யம், மனைவி மக்கள் யாவரையும் மீண்டும் பெற்றான். சத்தியம் இறுதியில் வென்றது. அறம் செய்ய விரும்புபவர்கள் ஒழுக்கமும் உறுதியும் வடிவெடுத்தவர்களாக இருக்கவேண்டும். கோழையோ பலஹீனனோ அறநெறி நிற்க முடியாது.

மக்களின் இயல்பைமுன்னிட்டுப் பிராம்மணர்கள், க்ஷத்திரியர்கள், வைசியர்கள், சூத்திரர்கள் என மக்களை நான்கு வகையாகப் பிரிக்கலாம். அவர்களின் இயல்புக்கு ஏற்ற அறநெறி உண்டு. அகக் கரணங்களையும், புறக்கரணங்களையும் அ ட க் கு த ல், தவம், தூய்மை, பொறுமை, நேர்மை, சாஸ்திர ஞானம், சுவானுபவ ஞானம், முற்றிலும் தெய்வத்தை நம்பி இருத்தல், ஆகியவை பிராம்மண இயல்பு படைத்தவர்களுடைய தர்மமாகும். எல்லா உயிர்களிடத்தும் அருளைச் சொரிந்து செந்தண்மை பூண்டு ஒழுகுபவன் அந்தணன் ஆகின்றான். முற்றும் அவன்ஈசுவர நம்பிக்கை உடையவனாகிவிருந்து கடவுளைச் சார்ந்திருக்கின்றான். கடவுளுக்கென்றே அவன் உயிர் வாழ்ந்திருக்கிறான். பொருளையோ போகத்தையோ அவன் நாடுவதில்லை. எளிய வாழ்க்கையை மேற்கொண்டு உடல் பற்றை ஒழித்திருக்கின்றான். ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய வாழ்வு அந்தணனுடையபாரமார்த்திக வாழ்வுக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும். பிராம்மண தர்மம் அதிகரிக்கின்றளவு உலகுக்கு க்ஷேமம் உண்டாகின்றது.

மக்களை ஒழுக்க நெறியில் கொண்டுசெலுத்துவது க்ஷத்திரிய தர்மமாகின்றது. உலகில் நலத்தை நிலைநாட்டுவதற்காக க்ஷத்திரியன் தன் உடல் வாழ்க்கையை ஒப்படைக்கின்றான். அறநெறி நில்லாதவர்களை அடக்கவும், ஒடுக்கவும், வெல்லவும், அழிக்கவும் அரசன் கடமைப்பட்டிருக்கின்றான். எதிரிக்கு அஞ்சாத வீரமும், அச்சத்தை அறியாத துணிவும், களைப்பே அறியாத உறுதியும், சூழ்நிலையை அறிந்து எதிரியை வல்லமையோடு தாக்கக்கூடிய சாதுர்யமும், பகைவனுக்குப் பயந்து புறங்காட்டி ஓடாத பண்பும், குடிகளை முறையாக ஓம்புதல் ஆகிய கொடையும், மக்களை ஆளும் திறமையும்உடையவன் க்ஷத்திரியன். ஆண்மையோடு அருளையும் பொருளையும் உலக நன்மைக்குப் பயன்படுத்துபவன் க்ஷத்திரிய தர்மம் செய்பவன் ஆகின்றான்.

பயிர்த்தொழில் செய்தல், சிற்றுயிர்களைப் பாதுகாத்தல், வியாபாரம் செய்தல், தொழிற்சாலை அமைத்தல் ஆகிய இவையாவும் செல்வத்தை உண்டுபண்ணும் தொழில்களாம். பொருளை ஈட்டுவதும், மக்களுக்கு இடையே அது முறையாகப் போய்ச் சேருவதற்கு வாணிகம் செய்வதும் வைசிய தர்மமாகும். மக்களுடைய நல்வாழ்வைக் கெடுக்கின்ற கஞ்சா, அபின், மதுபானம் போன்ற பொருள்களை உண்டு பண்ணி அவைகளை மக்களிடையே வழங்குவது வைசிய தர்மமாகாது.

சிந்திக்கத் திறன் இல்லாது பிறர் இடத்தில் வேலைக்கு அமர்ந்து இட்ட வேலைகளைச் சம்பளத்துக்காகச் செய்பவன் சூத்திரனாகிறான். இன்று கைக்கூலி அல்லது லஞ்சம் ஏற்கின்ற எல்லாரும் சூத்திரர்களாகின்றார்கள். உடல் பற்றை வளர்ப்பது சூத்திர தர்மமாகும்.

இத்தகைய நான்கு வர்ணத்தார்களுக்கு ஏற்ற தர்மங்கள் இருக்கின்றன. அவரவர்களின் சுபாவத்துக்கேற்ற தர்மத்தைப் பின்பற்றுவது ஸ்வதர்மமாகும். வேலையில் மேலானதுகீழானது என்பது இல்லை. எத்தொழிலைச் செய்தாலும் நல்ல மனநிலையுடன் செய்தால் மனபரிபாகம் அடையலாம். நம் இயல்புக்கு ஏற்ற தர்மத்தைச் செய்ய ஊக்கம் கொள்ளுதல் வேண்டும். 'அறஞ்செய விரும்பு' என்னும் ஔவையாருடைய ஆத்திச்சூடி இவ்வுண்மையை நமக்கு வற்புறுத்துகிறது. (முற்றும்)

கவிதைகள் புகட்டும் தத்துவங்கள்

(பத்தாம் வகுப்பு ஆங்கிலப் பாடப்பகுதியில் உள்ள கவிதைகளின் கருத்து விளக்கம்)

[56 ஆம் பக்கத் தொடர்ச்சி]

அந்தோனியோவின் கப்பல்கள் குறித்த காலத்தில் வந்து சேரவில்லை. அவை கடலில் மூழ்கிவிட்டதாகச் செய்திதான் வந்தது. காலம் கடந்துவிட்டதால் நீதிமன்றத்தில் ஷைலக் நிபந்தனைப்படி அந்தோனியோவின் உடலிலிருந்து ஒரு பவுண்டு தசைதான் வேண்டுமென்று கேட்கிறான். பஸானியோவின் மனைவி போர்ஷியா நீதிமன்றத்தில் ஷைலக்கைப் பார்த்து "பத்திரத்தில் ஒரு பவுண்டு தசை என்றுதான் குறிக்கப்பட்டிருக்கிறது. அந்தோனியோவின் உடலிலிருந்து தசை எடுக்கும்பொழுது ஒரு சொட்டு ரத்தமும் அவன் உடலிலிருந்து வரக்கூடாது. பத்திரத்தில் ரத்தத்தைப்பற்றிய பேச்சுக்கு இடமில்லை. ரத்தம் சிந்தாமல் அந்தோனியோவின் உடலிலிருந்து தசையை எடுத்துக்கொள்" என்று கூறினாள். ஷைலக் செயலற்றவன் ஆனான். இரக்கக் குணம் வாய்ந்த அந்தோனியோவை அக்குணமே காப்பாற்றியது.

இங்கு இரக்கக் குணத்தைப்பற்றி அந்நாடகத்தில் ஷேக்ஸ்பியர் எழுதிய பகுதி விளக்கப்படுகின்றது. வானிலிருந்து மழை இயல்பாக மண்ணுக்கு வருகின்றது. அங்ஙனம் ஹிருதயத்திலிருந்து இரக்கம் தானாக வெளிப்பட்டுப் பிறர்பால் செல்லுகின்றது. இரக்கம் என்ற பண்பு இரக்கம் காட்டுபவனையும், அவ்விரக்கத்தைப் பெறுபவனையும் இன்புறச் செய்கின்றது. இரக்கம் வலிமை வாய்ந்த சக்தியாகும். அரசன் கையில் இருக்கும் செங்கோலையும், கிரீடத்தையும் காட்டிலும் கருணை உயர் தகுதி உடையது. அரசனுடைய செங்கோலைக் கண்டு மக்கள் அஞ்சுகின்றனர். செங்கோலைப் பயன்படுத்தி அரசன் மக்களை ஆட்சிபுரிகின்றான். ஆனால் அத்தகைய அரசனிடம் மக்கள் கொடுமையைக் காண்கின்றார்கள். நீதி வழங்கும்பொழுது அரசன் கருணையுடன் அதைச் செய்வானானால் அவன் தன்னைத் தெய்வ நிலைக்கு உயர்த்திக்கொள்கின்றான். நீதியில் கருணை காட்டும் அரசனை மக்களும் தெய்வமாகப் போற்றுகின்றார்கள்.

செங்கோல் அரசனுடைய கையில் இருக்கிறது. கருணை அரசனுடைய ஹிருதயத்தில் இருக்கிறது. செங்கோல் உலகத்தில் ஆதிக்கம் படைத்திருப்பதற்கு ஒரு சின்னமாகின்றது. கருணை தெய்வீக சக்தியாகின்றது. செங்கோல் மக்களுடைய உள்ளத்தில் அச்சத்தையும் நடுக்கத்தையும் உண்டாக்குகின்றது. இரக்கம் அல்லது கருணை மக்களுடைய உள்ளத்தில் அன்பையும் இனிமையையும் தோற்றுவிக்கின்றது. எனவே இரக்கம் செங்கோலைக் காட்டிலும் பலம்பொருந்தியது. கருணை என்ற பேர் இயல்பை உள்ளத்தில் வளர்த்து அதை உலக மக்களுக்கு வழங்கி நாமும் உலகமும் இன்புற்று இருப்போமாக என்ற கருத்தை ஷேக்ஸ்பியர் இங்கு வலியுறுத்துகிறார்.

உலகமாகிய மேடையில் வாழ்வாகிய நாடகம்

ஷேக்ஸ்பியர் எழுதிய 'As you like it' என்ற நாடகப் பகுதியிலிருந்து இங்கு ஒரு பகுதி விளக்கப்படுகிறது. உலகம் ஒரு நாடக மேடையாகும். மக்கள் அனைவரும் நடிகர்கள் ஆவார்கள். வாழ்வு நாடகமாகும். பிறப்பு என்ற வாயிலின் மூலம் மக்கள் இந்நாடக மேடைக்கு வருகின்றனர். இறப்பு என்ற வாயிலின் மூலம் இந்நாடக மேடையிலிருந்து வெளியேறுகின்றனர். மனித வாழ்க்கையில் ஏழு நிலைகள் இருக்கின்றன. குழந்தை நிலை, பள்ளி செல்லும் மாணக்க நிலை, குடும்பத்தில் நுழைய விரும்பும் காதல் நிலை, பேரும் புகழும் தேடி வீரத்தை வெளிப்படுத்தும் வீர நிலை, அனுபவம் பெற்று அறிவைப் பெருக்கி நீதி வழங்கும் நிலை, வயோதிக நிலை, மரணம் அடையும் நிலை என்பன முறையே அந்நிலைகளாகும்.

குழந்தைப் பருவத்தில் முற்றிலும் பிறரைச் சார்ந்திருக்கின்ற நிலை ஏற்படுகின்றது. வளர்ப்புத்தாயின் மடியிலும் கையிலும் குழந்தை வளர்கின்றது. பயத்தால் வீச்சு வீச்சு என்று கத்துவதும், வளர்ப்புத்தாயின் மடியில் வாந்தி பண்ணுவதும், மலம் கழிப்பதும் குழந்தைப் பருவத்தில் நிகழ்கின்றன. அடுத்த பருவம்

மாணவப் பருவம். தோளில் ஒரு பையைத் தொங்கவிட்டுக்கொண்டு அரை மனதுடன் அசைந்து அசைந்து, நத்தைபோன்று நெளிந்து நெளிந்து பள்ளி செல்கின்ருன் மாணவன். அதிகாலையில் மாணவன் படுக்கையைவிட்டு எழுந்திருக்கும் பொழுது அவனுடைய முகம் பிரகாசமாக இருக்கிறது. ஆனல் பள்ளி செல்லும்பொழுது அவனுடைய அகத்தை முகம் விளக்கிக் காட்டுகிறது. பள்ளிக்குப் போவதில் அவனுக்கு விருப்பம் உண்டாவதில்லை. விருப்பமில்லாத செயலைப் பெற்ரேரின் வற்புறுத்தலுக்காகச் செய்து வருகிருன்.

அடுத்த பருவம் காதல் பருவம் ஆகிறது. காதலியைக் குறித்து அவனுடைய உள்ளம் கொதிப்படைந்துகொண்டு இருக்கிறது. அடுப்பில் நெருப்பு எரிவது போன்று அவனது உள்ளத்தில் துயரம் என்னும் நெருப்பு எரிகிறது. அடுத்து வீரனுக விளங்க விரும்புகின்ருன். வாழ்க்கையில் பல உறுதிமொழிகளை எடுத்துக்கொள்கின்ருன். பேரும் புகழும் வேண்டி அலைகின்ருன். புகழைப் பாதுகாப்பதற்காக உயிரையும் கொடுக்கத் துணிகின்ருன். அழியும் உலகக்கீர்த்திகளைப் பெறுவதில் ஆர்வம் உடையவனுக இருக்கின்ருன். சண்டைக்கு முந்திக் கொள்கின்ருன். இது மனிதனுடைய நான்காவது நிலை.

ஐந்தாவது நிலை வாழ்க்கை அனுபவம் பெற்ற நிலையாகும். அந்நிலையில் அவனுக்குத் தொந்தி விழ ஆரம்பிக்கிறது. ஆழ்ந்த சிந்தனை உடையதாக அவன் கண் பார்வை தோன்றுகிறது. அவன் பல விஷயங்களைச் சான்றுகளோடு எடுத்து விளக்குகிருன். அவன் வாயிலிருந்து உபதேசமொழிகள் வருகின்றன.

ஆருவது நிலை கிழப்பருவமாகும். உடம்பு இளைத்து நடை எல்லாம் தளர்ந்து போகும் நிலையில் இருக்கிறது. மூக்குக் கண்ணுடி அணிந்துகொள்கிருன். இரண்டு பக்கங்களிலும் பைகளைத் தொங்கவிட்டுக் கொள்கின்ருன். உடம்பு எல்லாம் சுருங்கிப் போகின்றது. அவனுடைய கம்பீரமான குரல் குழந்தையின் குரல் போன்று தழதழத்துப் போகிறது. பேசும்பொழுது கீச்சுக்குரல் வெளிப்படுகிறது.

கடைசி நிலை மரணத்தை நெருங்கிக்கொண்டிருப்பதாகும். அப்பொழுது ஞாபகசக்தி குன்றிப்போய் விடுகிறது. கண் மங்கிப்போய் விடுகிறது. பற்கள் விழுந்து பொக்கைவாய் ஆகிவிடுகிறது. நா சுவையை அறியச் சக்தியற்றுப்போகிறது. ஐம்பொறிகளும் செயலற்று வாழ்க்கை சுவையற்றதாகப் போய்விடுகிறது. இதுதான் மானுட வாழ்க்கை என்ருல் இதில் நாம் அடையும் பயன் என்ன என்பதைச் சிந்திக்கவேண்டும். அழிந்து போகின்ற உடலையும், பொருளையும், புகழையும் பொருள்படுத்தாது அழியாப் பெருநிலையாகிய பேர் அறிவையும், பேர் ஆற்றலையும், பேர் அன்பையும் மானுட வாழ்வில் நாம்பெற முயலவேண்டும். வாழ்க்கை என்னும் நாடகத்தை உலகம் என்னும் மேடையில் நடித்து வாழ்வைப் பெருவாழ்வாக்க முயல்வோம். மானுடவாழ்வை ஒரு நாடகமாக அமைத்து மானுடவாழ்வில் அடைகின்ற மாறுதல்களை இந்நாடகத்தில் ஷேக்ஸ்பியர் தெளிவாக விளக்கிக் காட்டியுள்ளார்.

நாடகத்தில் நடிப்பவர்களுக்கு அதில் நிகழ்கின்ற செயல்களெல்லாம் பொய் என்பது தெரியும். உலகவாழ்வில் செல்வந்தனுக இருப்பவன் நாடகத்தில் பிச்சைக்காரனுக நடிக்கிருன் என்று வைத்துக்கொள்வோம். பிச்சைக்காரனுக நடித்து அவன் முதல் பரிசு வாங்கி இருக்கலாம். அவன் பிச்சைக்காரனுக நடிப்பதைப் பலரும் பாராட்டி இருக்கலாம். பிச்சைக்காரனுக நடித்த செல்வந்தன் உள்ளத்தில் ஏழ்மையைப்பற்றிய உணர்ச்சி இல்லை. தான் உண்மையில் செல்வந்தன் என்பதை அவன் பிச்சைக்காரனுக நடிக்கும்பொழுது உணர்ந்துதான் நடிக்கிருன். நாடகத்தில் நடிப்பவன் தான் நடிக்கின்றநிலை தனக்கு உரியதன்று என்று எண்ணுவது போன்று உலகில் நாம் வாழ்கின்ற நிலை நமக்குரியதன்று என்று உணரவேண்டும். நம்முடைய உண்மையான சொரூபம் அழியாத ஆத்ம சொரூபம் என்றும், நம்முடைய உண்மையான நிலை பேரின்ப நிலை என்றும் நாம் உணர்ந்து அதில் யாண்டும் நிலைபெற்றிருக்க வேண்டும் என்பதை இந் நாடகத்திலிருந்து நாம் அறிந்துகொள்ள வேண்டும். (தொடரும்)

ஸ்ரீமத் பாகவதம்

(சுவாமி ஸதானந்தர்)

ராமகோபத்தைப் பார்த்துக் கடல் வாழ் பிராணிகள் எல்லாம் பயந்தன. இந்திரன் யானையாகிய ஐராவதம் ராவணனின் மார்பில் தன் தந்தங்களால் குத்தியது. அப்பொழுது அந்தத் தந்தங்கள் முறிந்து விழுந்தன. அந்தத் தந்தங்களின் பிரகாசத்தால் திக்குகள் எல்லாம் ஒளிபெற்றன. அதைப் பார்த்து அகங்காரம் மிகக்கொண்ட ராவணன் அது தனது வெற்றியின் மகிமை என்று செருக்குற்றான். எல்லாத் திசைகளிலும் எல்லாரையும் வென்றுவிட்டதாகத் தற்பெருமை கொண்டான். இந்த ராவணனை உலகின் தொல்லையை ஸ்ரீராமன் போர்க்களத்தின் மத்தியில் யாவரும் பார்த்திருக்க அம்புகள் எய்து கொன்றான். இங்ஙனம் மற்றுமொருமுறை இவ்வுலகத்தின் துயர் தீர்ந்தது.

என் ஆண்டவன், என் பிரபு நாராயணன் மீண்டும் ராமகிருஷ்ணராக (பலராமன், கிருஷ்ணனாக) அவதரித்தார். நீலமேக சியாமள வர்ணமுடையவனாகக் கிருஷ்ணனும் செம்மேனி படைத்தவனாகப் பலராமனும் விளங்கினர். கொடிய அசுர, க்ஷத்திரிய படைகள் ஓயாது சண்டையிட்டுக்கொண்டே இருந்தன. நாடும் மக்களும் அமைதியின்றித் தவித்தனர். பூபாரம் துடைத்து இந்நிலையினின்று உலகைக் காத்தார் என் ஆண்டவன். இந்த அவதாரத்தில் அவர் புரிந்த லீலைகளோ அனந்தம். என் ஆண்டவனின் பெருமையை, விபூதியை, சக்தியை அவருடைய லீலைகள் விளக்கிக்கொண்டிருக்கின்றன. அவர் பச்சைக் குழந்தையாக இருந்தபோது பூதனை என்கிற அரக்கியைக் கொன்றார். அவர் மூன்று மாதக் குழந்தையாக இருந்தபோது சகடாசுரனைக் கொன்றார். குழந்தைமேல் ஏறிக் கொன்று விடக் கருதி பாரவண்டி ரூபத்தில் வந்த அசுரனைத் தன் காலால் உதைத்து வண்டியைத் தூளாக்கினர். அவர் தவழும் குழந்தையாக இருந்தபோது உரலில் கட்டப்பட்டார். அவர் அதை இரண்டு பெரிய மரங்களின் நடுவே இழுத்துச்செல்ல அவ்விரண்டு மரங்களும் வேரோடு சாய்ந்தன. மரங்களின் வடிவங்களிலிருந்த தேவர்கள் சாப விமோசனம் பெற்றனர். ஆ! அக்குழந்தை வடிவில் தோன்றிய என் ஆண்டவன் அளப்பரியவன். அவர் வயதில் கட்டுண்டவரல்லர். காலம் அவரைக் கட்டுப்படுத்தாது. மாயை அவரை மறைக்காது. அவர் யாவற்றுக்கும் யஜமானன். காளிங்கன் என்னும் சர்ப்பத்தினல் குடிநீர் முழுவதும் விஷமாக்கப்பட்டிருந்தது. அதைப் பருகிய கால்நடைகள், கோபாலர்கள் யாவரும் மயங்கி விழுந்துவிட்டனர். அச்சிறுவனின் அருள்பார்வையால் அவையாவும் உயிர் பெற்றன. மடுவில் குதித்து அக்காளிங்கனைக் கொன்று அதன் தலைமேல் என் பிரபு ஆனந்த நர்த்தனமாடினர். என் ஆண்டவன் எல்லாவற்றுக்கும் மேலானவர். என் ஆண்டவனுக்கு இவ்வரிய செயல்கள் எல்லாம் சாத்தியமாகும்.

கோடையின் வறட்சியினல் பிருந்தாவனத்தில் காய்ந்து கிடந்த மரங்கள் ஓர் இரவு தீப்பற்றிக்கொண்டன. கோபாலர்கள் யாவரும் தூங்கிக்கொண்டிருந்தனர். என் ஆண்டவன் அந்தத் தீயைச் சாப்பிட்டுவிட்டார். கோபாலர்கள் காப்பாற்றப்பட்டனர். என் ஆண்டவனுக்கு முடியாத காரியம் என்று ஒன்று உண்டா? அவரிடத்திருந்தே பஞ்சபூதங்களும் வந்துள்ளன. அவர் தாய் யசோதை அவரைக் கயிறுகொண்டு கட்ட வந்தபோது, என்ன ஆச்சரியம், எவ்வளவு கயிறுகொண்டும் அவரைக் கட்ட முடியவில்லை. ஆண்டவன் எதிலும் கட்டுப்படாதவர். அவரைக் கட்டவோ பந்தப் படுத்தவோ யாராலும், எதனாலும் முடியாது. அந்தத் தெய்வக் குழந்தை ஒரு சமயம் வாயைத் திறந்தது. ஆ! அவர் வாயில் இப்பிரபஞ்சம் முழுவதும் அடங்கியிருப்பதைப் பார்த்து யசோதை பயந்து போனாள். இக்குழந்தை அசாதாரணமானது, தெய்வீகமானது என்று யசோதை கண்டுகொண்டாள்.

மாயா என்கிற அசுரனின் மகன வியோமன் பிருந்தாவனக் கோபாலர்களையெல்லாம் ஓர் ஏரியில் மறைத்து வைத்துவிட்டான். கண்ணனின் தந்தை நந்தகோபன் மிகவும் கவலையும் பயமும் அடைந்தார். என் பிரபு இக்கோபாலர்களை மீட்டுத் தன் தந்தையாரின் துயரத்

தைத் துடைத்தார். அந்தக் கோபாலர்கள் செய்த பாக்கியம்தான் என்ன! ஆ! அவர்கள் எல்லாரையும் எம்பெருமான் வைகுண்டத்துக்கு அழைத்துப் போய் வந்தார். கண்ணன் இந்திர பூஜையைக் கோவர்த்தன பூஜையாக ஆக்கிய பொழுது இந்திரன் கோபமடைந்து ஏழு நாட்கள் ஓயாது பெருமழையைக் கொட்டித் தள்ளினன். யமுனை பெருக்கெடுத்தது. எங்குப் பார்த்தாலும் பெருவெள்ளம். கோபாலர்கள் யாவரும் வெகுவாக அவதிப்பட்டனர். என் ஆண்டவன் கோவர்த்தன மலையைச் சுண்டு விரலால் குடைபோல உயரத்தூக்கித் தாங்கிப் பிடித்துப் பிருந்தாவனக் கோபாலர்களைக் காப்பாற்றினர். தீராத விளையாட்டுப் பிள்ளையாகிய அவர் பிருந்தாவனத் தோப்புகள், வனங்கள், புல் வெளிகள் யாவற்றிலும் துள்ளித் திரிந்தார்; ஓடி விளையாடினர். அவர் முகத்தில் துளிர்த்த வேர்வையும் படிந்த புழுதியும் அவர் அழகை மேலும் அதிகமாக்கின. அவர் ஒருநாள் இரவு பௌர்ணமியின் முழு நிலா வெளிச்சத்தில் வனத்தில் விளையாடித் திரிந்தார். அவர் புல்லாங்குழல் ஊதி இனிய இசையை எழுப்பினர். அது பிருந்தாவனம் முழுவதும் எதிரொலித்தது. கோபிகாஸ்திரீகள் இந்த இசையில் மனதைப் பறிகொடுத்தவர்களாகத் தங்கள் வேலைகளையெல்லாம் அப்படி அப்படியே விட்டு விட்டுக் கண்ணனிடம் ஓடி வந்தார்கள். இது கடவுளின் அழைப்பு அன்றோ! ஜீவன் அதற்கு எப்படி வசப்படாதிருக்க முடியும்! இப்படி ஓடிவந்த கோபிகாஸ்திரீகளை அபஹரிக்க சங்கசூரன் என்பவன் வந்தான். அவனை என் பிரபு கொன்று விட்டார். பலராமன், கேசவன், முரளீதரன் ஆகிய பெயர்கள் எல்லாம் என் ஆண்டவனின் திருநாமங்கள் ஆகும் அவைகளை எல்லாம் நம் குழந்தைகளுக்கு வைத்து நாம் மகிழ்கிறோம். பிரலம்பன், கரன், பகன், கேசி, அரிஷ்டன், மல்லன், குவலயாபீடம், ஜபனு, கபி, பௌண்டரகன், சால்வன், நரகன், பால்கலா, தந்தவக்ரன், சப்தாக்ஷன், சம்பரன், விதுரதன், ருக்மி ஆகிய செருக்குற்ற அரசர்களும், அசுரர்களும் ஸ்ரீ கிருஷ்ணனை எதிர்த்துத் தாக்கினர்கள். ஆனல் அனைவரும் என் பிரபுவால் கொல்லப்பட்டார்கள். என் ஆண்டவனல் கொல்லப்பட்டமையால் அவர்கள் அனைவரும் நற்கதி அடைந்தனர். இந்த யுத்தங்கள் எல்லாம் மிக்க அசாதாரணமானவை. என் ஆண்டவனல் வெற்றி கொள்ள முடியாத போர், நெருக்கடி, சூழ்நிலை என்ன இருக்கிறது?

யுகங்கள் மாறின. கலியுகம் வந்தது. அதன் விளைவாக மக்களின் ஆயுள் குறுகியது, நல்லறிவு மங்கியது, சுயநலம், புலன் இன்பங்களில் நாட்டம் பெருகியது. போட்டி பொறாமைகள் அதிகரித்தன. நல்லவைகளைப் புரிந்து கொள்ளும் சக்தி குன்றியது. என் ஆண்டவனல் இயற்றப்பட்ட வேதங்களின் உட்பொருளைப் புரிந்து கொள்ள மக்களுக்கு இயலவில்லை. காம காஞ்சனமே அவர்களுக்கு முக்கியமாகப் பட்டன. இந்த இருண்ட நிலையைக் கண்டு பகவான் அவதரித்தார். வியாசராக (சத்தியவதியின் திருக்குமாரராக) வேதங்களை யெல்லாம் பாகுபாடு செய்து வகைப்படுத்தித் தம் சிஷ்யர்களிடம் ஒப்படைத்துப் பாதுகாத்தார். நுண்ணிய விஷயங்களைத் துருவி அறிவதற்கு யுக்தி மிகப் பெரிய அறிவு சாதனம் ஆகும். ஆனல் அது குயுக்தி, விபரீத வியாக்கியானமாக வடிவெடுத்தது. சுயநலம், பேராசை என்கிற தவருன கோட்பாடுகள் வடிவெடுத்தன. விஞ்ஞானம் மாயா தனயன் என்கிற அசுரனல் புதிய சாதனங்கள், வேகம் நிறைந்தவை, மோகம் நிறைந்தவை, அழிக்கும் தன்மைவாய்ந்தவைகளாகப் படைக்கப்பட்டன. காபாலிகன் நரபலி செய்து தன் நலனை நற்கதியை, அரசபதவியை, சௌபாக்கியத்தைப் பெறலாம் என்கிற கொள்கை உடையவன். யாகம் செய்தல், கிரியைகள், வெறும் சடங்குகள், கர்மகாண்டம் இவைகள் பெருகின. மக்களில் நல்லவர்கள் கூடக் குழப்பமடைந்தனர்: இந்த அழிவு நிலையில் என் ஆண்டவன் புத்தராகப் பிறந்தார். தத்துவங்களை விளக்கினர். உயிர்ப்பலி யாகத்தை நிறுத்தினர். தன்முயற்சியை ஊக்குவித்தார். ஆசைதான் எல்லாத் துயரங்களுக்கும் மூல காரணம். அவ்வாசையை விடச்சொன்னர். அப்போதைய விபரீதக் காலப்போக்குக்கு ஏற்ற நல்ல கொள்கைகளைப் பரப்பினர். மதம் அல்லது மனிதனின் நல்ல மனப்பான்மை என்கிற மாளி

கையை ஒட்டடை அடித்து வெள்ளை அடித்து மராமத்துப் பார்த்துக் குடியிருக்க ஏற்றதாக—ஆரோக்கியமானதாக ஆக்கினர். காலப்போக்கில் மறுபடியும் மக்கள் மனது கீழே போகும். உலக நாட்டம் அதிகரிக்கும். நல்லவர்கள் குடும்பங்களிலும் தெய்வ வழிபாடும், தெய்வச் சிந்தனையும், நல்ல பேச்சும் இல்லாமல்போகும். நாஸ்திகம் தலைதூக்கும். கடவுள் வழிபாடும் சிந்தனையும் அவசியமற்றவை; அது மனிதனைப் பாழ்படுத்துகிறது; முன்னேற விடவில்லை என்கிற கொள்கைகள் பரவும். சூத்திரர்கள்—பண்பற்றவர்கள் அரசர்கள் ஆவார்கள். எங்குமே சுயநலம் பண்பற்ற செயல்களே இருக்கும். தியாகம், பரநலத்தொண்டு, ஒற்றுமை ஆகிய நற்குணங்கள் சிறிதும் இல்லாத நிலைமை ஏற்படும். அப்போது என் ஆண்டவன் கல்கியாக அவதரிப்பார். எல்லாத் தீமைகளையும் அழித்து நன்மையை வளர்ப்பார்.

குழந்தாய் நாரதா! சிருஷ்டிக்கு நானும் பிரஜாபதிகளும் பொறுப்பாய்க் காரணமாய் இருக்கிறோம். ஸ்திதி அல்லது காத்தல் தர்மம், விஷ்ணு, மனு, தேவர்கள், அரசர்கள் இவர்களால் நிகழ்கிறது. சம்ஹாரமானது அதர்மம், அநீதி, நேர்மையின்மை ஆகிய தீயகுணங்களாலும், சிவனாலும் கொடிய விஷ சர்ப்பங்களாலும், அசுரர்களாலும் நிகழ்கிறது. இவைகள் எல்லாம் மாயா காரியங்கள்—மாயையின் காரியங்கள். இம்மாயையோ நிர்க்குணப் பிரம்மத்தின், பரம்பொருளின் ஆத்மாவின், மகிமை, சக்தி, விபூதி, இயல்பு ஆகும். அவரே நாராயணன், பரவாசுதேவன் ஆகிறார். அவர் லீலைக்கு, மகிமைக்கு அளவு இல்லை. அதை முழுதும் உணர்ந்தார் இல்லை. அவர் மகிமையின் அனந்தங்கோடி பங்குகளில் ஒரு பங்கு இந்தப் பிரபஞ்சம் ஆகும். கடற்கரை மணலை எப்படி எண்ணிக் கணக்கிட முடியாதோ அப்படி என் ஆண்டவனின் மகிமைக்கு அளவே இல்லை. முக்குணங்களின் தாரதம்மியத்தால், சமநிலை மாறுபாட்டால் உலகங்கள் உண்டாகின்றன. மறுபடியும் சமநிலைக்குக் கொண்டுவருபவர் என் ஆண்டவனே ஆவார். சத்தியலோகம்கூட ஒவ்வொரு சமயம் கலக்கமடைகிறது, மாசுபடிகிறது. பிறகு ஆண்டவன் அதை நிலைப்படுத்துகிறார், தூய்மைப்படுத்துகிறார். நமக்கு முன்பு தோன்றிய உயர்ந்த முனிவர்களும், நாமும் இன்னும் நம் ஆண்டவனின் பெருமையை முழுவதும் அறியாதுதான் இருக்கிறோம். இனி யார் அறியப்போகிறார்கள்! ஆதிசேஷன்—அனந்தன் ஆயிரம் நாவு படைத்தவனாய் இருக்கிறான். அவனாலும் என் ஆண்டவனின் ஸ்தோத்திரம் பாடி முடியவில்லை. எவன் ஒருவனுக்கு என் ஆண்டவனின் அருள் கிட்டுகிறதோ, எவன் ஒருவன் அவரிடத்துத் தன்னை ஒப்படைக்கின்றானோ, அவர் பாதங்களைத் தஞ்சமெனப் பற்றுகின்றானோ, உண்மையான பக்திவாய்ந்தவனாக இருக்கின்றானோ அவனே இம் மாயையைக் கடந்து என் ஆண்டவனை அடைவான். நாய் நரிகளுக்கு உணவாகிற இந்தச் சரீரத்தையும், அழிந்துபோகின்ற இவ்வுலகப் பொருள்களையும் எவன் யான் எனது என்று பற்றிப் பிடிக்காமல் என் ஆண்டவனையே பற்றிக்கொள்கிறானோ அவனே அவரை அடைவான். இங்ஙனம் என் ஆண்டவனை முன்பு ரிஷிகள் பலர் அடைந்துள்ளார்கள்; இனியும் அடைந்துகொண்டே இருப்பார்கள். தனது கீழ்மையை உதறி எறிந்துவிட்டுச் சன்மார்க்கத்தைச் சிரேயஸை—என் ஆண்டவனை யார் பற்றுகிறானோ அவனை என் ஆண்டவன் ஆட்கொள்கிறான். அவனது அறிவு, ஆற்றலைவிட அவனது அன்பு, அருள், கருணை என்றும் பெரியது மிக்கது.

என் பிரபுவைக் கண்டுகொண்ட முனிவர்கள் அவரை உள்ளபடி தெரிந்த மொழிகளால், இயன்ற அளவு விளக்கியுள்ளார்கள். அதைப் படிக்கிறவர்களுக்கும், ஓதுகிறவர்களுக்கும் என் ஆண்டவனைப் புரிந்துகொள்ளவும், உணரவும் இயலும். மனதுக்கு இதைவிட உயர்வான பிரவிருத்தி சிறப்பான வேலை நல்ல உணவு வேறு இல்லை. பக்தர்கள் விரும்பித் தங்கள் மனதை இதில் ஈடுபடுத்துகிறார்கள். அவர்கள் மனம் தெய்வமயம் ஆய்விடுகிறது. கடவுள் பரப்பிரம்மம், ஆத்மா சத்சித் ஆனந்த ரூபம். அது ஆண்டவனுடைய சொரூப லக்ஷணம். சத்-சத்தியம்—என்றைக்கும் உள்ளவர், அழியாதவர், தோன்றாதவர், அது சித்-சேதனம் — அறிவுப் பொருள், பேரறிவுப் பொருள்; ஆனந்தம்-அன்பு—அருள், துக்க

மற்ற நிலை. சத்தியம்-ஞானம் — அனந்தம், சாந்தம்-சிவம்—சுந்தரம் என்றெல்லாம் விளக்கப்பட்டிருக்கிறார். அங்கே பயமில்லை, சோகம் இல்லை. பந்த பாசம் இல்லை, ஆவல் இல்லை. என் ஆண்டவன் மிக்க பரிசுத்தமானவர், அவரை வாக்கால் விளக்க முடியாது. அவருக்குக் கர்மம் ஏதும் இல்லை. அதனால் கர்மபந்தம், வினைப்பயன் இவைகளும் இல்லை. மாயை என் ஆண்டவன் அடிமை. அவள் அவருக்கு முன் நாணி, விசனமுற்று நிற்கிறாள். 'என் ஆண்டவனே எனக்கு ஏன் இக்கொடிய கடமையை உன்னை மறக்கச் செய்கிற, உலகை மோஹமடையச் செய்கிற, உலகப் பொருள்களில் பற்றை உண்டாக்குகிற கடமையை இட்டிருக்கிறாய்' என்று மாயை ஏங்கித் தவிக்கிறாள். ஏழை ஒருவனுக்குப் பெரும் நிதிப் புதையல் கிடைத்தால் எங்ஙனம் மகிழ்வானோ அவனது ஏழ்மை மறைந்து விடுகிறதோ அங்ஙனமே பக்தன் ஒருவனுக்கு ஆத்ம போதம், பரமாத்ம தரிசனம் கிடைத்து விட்டால் அவனது ஜீவபோதம், சரீர போதம் போய் ஆத்ம போதம் பரபோதம் பெற்றுவிடுகிறான். அவன் கடவுளே ஆகிவிடுகிறான். மறைக்கிறவரும் அவரே, அருளுபவரும் அவரே. மறைப்பவரும் அவரே, மறைக்கப்படுபவரும் அவரே. உலகில் உள்ள எல்லா நலன்களும் சிறப்புகளும், சௌபாக்கியங்களும் என் ஆண்டவனுடையவை, அவர் அருளியவை. அவரே எல்லாச் சத்காரியங்களையும் சீலங்களையும் தர்மத்தையும் அனுஷ்டித்துக் காட்டியுள்ளார். அதன் பிறகே அந்தணர்களும் நல்லவர்களும் அதைக் கடைப்பிடித்தார்கள். பானைக்குள் ஆகாசம் இருக்கிறது. பானையின் அழிவினால், பானை உடைந்ததால் எப்படி அந்த ஆகாசம் அழிவதில்லையோ அங்ஙனம் ஜீவாத்மா பரமாத்மா சம்பந்தம் உள்ளது, உயிர்களாக சரீரத்தின் அழிவினால் அதை இயக்கிய ஆத்மா அதைப் பயன்படுத்திய ஆத்மா அழிந்துவிடவில்லை. ஆகாயம்போன்று ஆத்மா ஒன்று தான். அது பலவாக ஆகவில்லை; மாறிவிடவில்லை, துண்டுபடவில்லை. அன்பான மகனே! இங்ஙனம் உனக்கு ஆத்ம தத்துவங்களை விளக்கினேன். காரண காரிய சொரூபமாக விளங்கும் இப்பிரபஞ்சம் முழுவதும் என் ஆண்டவன் நாராயணனே. அவரே இவை அனைத்தையும் எனக்குப் புகட்டினார், சொன்னார். அதனால்தான் இதற்குப் பாகவதம் என்று பெயர் வந்தது. பகவானால் சொல்லப்பட்டது என்று பொருள். பாகவதம் பகவானது மகிமைகள், விபூதிகள் பெருமைகள் அனைத்தும் தொகுக்கப்பட்டுள்ள நூல் ஆகும். இனி நீ இவ்வுலகில் இதை விளக்கமாகப் பரப்புவாயாக. நீயே அதில் தோய்ந்து உருக்கமாக எடுத்துரைப்பாயாக. அதனால் மக்கள் மனதில் பக்தி சுடர் விட்டு எரியும். மனமாசுகள் எரிந்துவிடும். யாரெல்லாம் பாகவதத்தைச் சொல்கிறார்களோ, யாரெல்லாம் அதை ஆர்வமுடன் பக்தியுடன் கேட்கிறார்களோ அதில் இன்பம் காண்கிறார்களோ அவர்கள் அனைவரும் மாயையில் கட்டுப்படாது கடவுளை அடைவார்கள்.

R. S. S. தொண்டர்களின் பணி

இவ்வாண்டு பிப்ரவரி மாதம் 24ஆம் தேதி தபோவனத்தில் ஸ்ரீ ராமகிருஷ்ண ஜயந்தி விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அவ்வமயம் சுமார் ஐம்பது R. S. S. தொண்டர்கள் நண்பகல் உணவு பரிமாறும் சேவையைச் சிறப்பாகச் செய்தனர். பிற்பகல் ஸ்ரீ விவேகானந்த வித்யாவனப் பள்ளி மாணுக்கர்களின் கலாநிகழ்ச்சிகளும் 'தவப்புதல்வர்கள்' என்ற நாடகமும் நிகழ்ந்தன. அவற்றைக் கண்டுகளிப்பதற்கு சுமார் ஐயாயிரம் பேர் வந்திருந்தனர். அக்கூட்டத்தை ஒழுங்குபடுத்தி கூட்டத்தில் அமைதிகாக்கும் செயலில் ஊக்கத்துடனும், உற்சாகத்துடனும் அவர்கள் ஈடுபட்டு விழா வெற்றி பெற உதவினர். இங்ஙனம் நாட்டுப்பற்றிலும், பொது நல சேவையிலும் அவர்கள் ஊக்கம் கொண்டிருப்பது பாராட்டத்தக்கது. நாட்டில் நலத்தைப் பாதுகாப்பதற்கும், கேட்டை ஒழிப்பதற்கும் R. S. S. போன்ற வலிவும், உறுதியும், தியாக உள்ளமும் படைத்த தொண்டர்கள் உருவாவது இன்றைக்கு அவசியம் பெருக வேண்டும்.

என் யாத்திரை அனுபவங்கள்

(சுவாமி துருவானந்தர்)

மதுரா கண்ணன் பிறந்த ஊர். அவனுடைய பால்ய விளையாட்டுக்கள் அனைத்தும் பிருந்தாவனத்திலும், அவனுடைய ஆட்சி துவாரகையிலும் நிகழ்ந்தன. துவாரகை கடற்கரையில் அமைந்துள்ள ஊர். ஆங்குள்ள கண்ணனின் விக்ரஹத்தைக் கண்ணால் கண்டு கொண்டே இருக்கலாம். எவ்வளவு பார்த்தாலும் சலிப்பு ஏற்படாது. அது மட்டுமன்று; ஏங்கிய உள்ளத்தோடு வரும் அனைவருக்கும் அருள் தாகத்தை அதிகப்படுத்தக்கூடிய தாகக் காட்சி அளிக்கிறான் கண்ணன். எவ்வளவு கூட்டம் இருந்தாலும் கண்ணனின் தர்சனத்தைப் பெற்றே தீருவது என்று உறுதியோடு ஓரமாய் ஒதுங்கியிருந்த என்னை ஓர் அன்பர் அழைத்துக் கண்ணனின் தரிசனம் செய்து வைத்தார். மாயோன் அல்லவா இந்த மாயங்களைப் பண்ணுகிறான் என்ற உணர்வோடு கண்ணனின் காட்சியைக் கண்ணால் கண்டு, மன நிறைவோடு அவ்விடத்தை விட்டுக் கடற்கரை வந்தேன். கடற்கரை எத்தனையோ ஆண்டுகளாகப் பக்தர்கள், ஞானிகளின் அருளுக்கு உறைவிடமாயிருந்ததல்லவா? அந்த மணலில் தனியே உலாவினாலே அருள் தாகம் ஏற்படுகிறது.

கடற்கரையில் பீரங்கிபோன்று உரல்கள் அடுக்கிவைக்கப்பட்டிருக்கின்றன. பண்டை மக்கள் சோமபானம் தயாரிக்க அவ்வுரலைப் பயன்படுத்தியதாகத் தென்படுகிறது. தொல் பொருள் இலாகாவினர் சமீபத்தில் ஆராய்ச்சி பண்ணிப் பல அரிய பொருள்களை எடுத்துள்ளனர். பிறகு ஓகா என்ற ஊர் வரை பஸ்ஸில் போய்ப் பிறகு பாய்மரம் கட்டிய பெரிய படகு ஒன்றில் பேட் துவாரகைக்குப் போனோம். பேட் துவாரகையிலும் கண்ணனுடைய ஞாபகமாகச் சிலவற்றை வைத்துப் பக்தர்களுக்குக் காட்டுகின்றார்கள். அவற்றைப் பார்த்துவிட்டுப் பிர்லா மந்திர், கலங்கரை விளக்கு, சிவன் கோயில் ஆகியவற்றிற்குச் சென்றோம். கடலுக்குள்ளே சிவன் கோயில் இருக்கிறது. அங்குச் சிவனாரைத் தரிசித்து ஒரு மணிநேரம் தியானம் செய்தோம். சூரிய அஸ்தமனம் பார்ப்பதற்கு அங்கு மிகவும் ரம்மியமாக இருக்கிறது. எல்லாம் பார்த்துவிட்டு நாங்கள் தங்கியிருந்த ஆஸ்ரமத்தில் உள்ளவர்களிடம் விடை பெற்றுக்கொண்டு புறப்பட்டோம். அதிதி சேவை செய்வதில் முதன்மை வகிக்கிறார்கள் அப்பகுதி மக்கள். பசுவைத் தெய்வமாக வணங்கி வருகிறார்கள். அந்த ஆஸ்ரமத்தில் காலில் நோயுற்ற ஒரு பசுவுக்குக் கட்டுக் கட்டி அதன் அருகிலே கட்டில் ஒன்று போட்டுக் குழந்தையைக் கவனிப்பது போன்று கவனித்து வருகிறார் சாது ஒருவர். அங்கிருந்து மகாத்மா காந்தி பிறந்த இடமாகிய போர்பந்தருக்குப் போகப் பஸ் ஸ்டாண்டுக்கு வந்துசேர்ந்தோம். மழை தூறிக்கொண்டிருந்தது. சிறிய பையன் முதல் பெரிய வாலிபர் வரை நான் கைந்துபேர் விபூதி, சந்தனம், குங்குமம், வில்வம், துளசி எடுத்துக்கொண்டு ஆங்காங்குப் பஸ்ஸுக்காக அமர்ந்திருக்கிறவர்களின் நெற்றியில் உரிமையோடு வைத்தனர். பெரும்பாலர் அதற்கு அனுமதி தருகின்றனர். பணம் கொடுப்பதும் கொடுக்காததும் அவர்கள் இஷ்டம். இப்படிப்பட்ட காட்சிகளைப் பார்த்துக் கொண்டிருந்தபொழுது பஸ் புறப்படத் தயாரானது. பஸ் ஏறிப் போர்பந்தர் போய்ச் சேர்ந்தோம். போர்பந்தரில் தங்குமிடத்தை அறிந்து உடைமைகளை வைத்து விட்டு மகாத்மா காந்தி பிறந்த இல்லத்தைப் பார்க்கப் புறப்பட்டோம். அவர் பிறந்தவீடு பெரிய மாடி வீடு. அவ்வீட்டில் அவர் படம் வைக்கப்பட்டுள்ளது. நாங்கள் தங்கியிருந்த ஆஸ்ரமத்திற்குச் சென்றோம். அன்று இரவு பெரிய கூட்டம் இருந்தது. பேச்சாளர் ஒருவர் சொற்பொழிவு குஜராத்தியில் நடத்தினர். மறுநாள் காலை அங்கிருந்து சோமநாதபுரக் கோயிலைக் காணப் புறப்பட்டோம்.

சோமநாதபுரம் கோயில் இயற்கையின் தாக்குதலுக்கு ஆளாவதை விட எதிரிகளின் தாக்குதலால் பல தடவை சின்னபின்னப்படுத்தப்பட்டது.

விவேகானந்த சுவாமிகள் 1891ல் இந்தப் பகுதிக்கு வந்தபொழுது இதன் மோசமான

நிலை அவர் உள்ளத்தைத் தொட்டது. கண்ணீர் மல்கினர். பிறகு விரைவில் இதற்கு விடிவு காலம் வரும், தீய சக்திகள் அழிக்கப் படும் என்ற உணர்வோடு அகன்றார். சுதந்திரம் பெற்றவுடன் குஜராத்தில் பிறந்து வளர்ந்த வல்லபபாய் படேல் இப்பெருமை வாய்ந்த கோயில் மீண்டும் புத்துயிர் பெற அரும்பாடுபட்டு அரசாங்க—மக்கள் உதவியோடு கோயிலைப் புதுப்பித்து மக்கள் வழிபட வசதி பண்ணியுள்ளார். கடல் அலைகள் கோயிலின் தடுப்புச் சுவர்களில் மோதி விழ்வதே ஓர் அலாதியான காட்சி. இரண்டு நாட்களாக மழை தொடர்ந்து பெய்து கொண்டிருந்ததால் எல்லா இடங்களையும் நன்ருகப் பார்க்க முடியவில்லை. வீராவல் என்ற ஊருக்கு உடனே பஸ் ஒன்று புறப்பட வீராவல் வந்து அங்கிருந்து பம்பாய் சென்றேம். மகாரஷ்டிராவில் உள்ள பண்டரிபுரம், நாசிக் முதலிய இடங்களைப் பார்க்க விழைந்தோம்.

மராட்டிய மாநிலத்தின் தலைநகர் பம்பாய். ஆங்கிலத்தில் பாம்பே என்றும் மராட்டிய மொழியில் மும்பாய் என்றும் பெயர்கள் வழங்கப்பட்டு வருகிறது. மும்பாய் என்பது அம்பாளுக்கு ஒரு பெயர் என்று சொல்லுகிருர்கள். நம் நாட்டில் ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒரு தனித்தன்மை உண்டு. அப்படிப் பார்க்கிற பொழுது மராட்டிய மாநிலத்துக்கே உரித்தானது வீரம். சத்ரபதி சிவாஜி மன்னன் தோன்றி நம் நாட்டிலுள்ள ஒவ்வொருவரும் எத்தகைய தேசபக்தியும் தெய்வபக்தியும் படைத்திருக்க வேண்டும் என்பதையும் அஞ்சாமையும், வீரமும் நம் ரத்தத்தில் இரண்டறக்கலந்துவிட வேண்டும் என்பதையும் தன் வாழ்க்கையில் நடத்திக்காட்டினன். பதினன்கு வயதில் பத்துக் கோட்டைகளை எதிரிகளிடமிருந்து மீட்டு மக்கள் சுதந்தரமாக வாழும் வாழ்க்கையைத்தந்தான் என்ருல் அவன் பராக்கிரமத்தை எண்ணிப் பார்ப்பது அவசியம். அந்த சத்ரபதி சிவாஜி மன்னன் பிறந்தது இந்த மராட்டிய மண்ணில்தான். மகாராஷ்டிர டூரிஸ்ட் கார்ப்பரேஷன் பஸ்ஸில் பம்பாயை ஒருநாளில் சுற்றிப் பார்த்தேன். தமிழ் நாட்டிலிருந்து பிழைக்கப் போனவர்கள் பலருடைய நிலை மிகவும் பரிதாபத்துக்குரியதாகயிருக்கிறது. அகம்நாபாத்தில்உள்ள மணி நகராகட்டும், பம்பாயாகட்டும் தமிழ் மக்கள் வாழ்வில்சிறக்க ஒற்றுமையாகயிருந்து உழைக்கக் கற்றுக்கொள்ளவேண்டும்.

பம்பாயிலிருந்து நாசிக் புறப்பட்டேன். நாசிக்கில் ராம்தாசர் தபசு பண்ணிய இடத்தைத் தரிசித்தேன், நாசிக் என்ற இடம் சரித்திர சம்பந்தமான சான்றுகளுடன் கூடியது. இராமாயணத்தில் வருகின்ற பஞ்சவடியும் நாம் பார்க்கிற நாசிக்கும் ஒன்றே. பஞ்சவடியில் ராமன், லட்சுமணன், சீதை வாழ்ந்தது போன்று இன்றும் செயற்கையாக சிலவற்றைச் செய்து யாத்ரிகர்களுக்குக் காட்டி ராமாயணக் கதையை விளக்குகிருர்கள். முன்பு ராமாயணத்தில் பஞ்சவடி என்று சொல்லப்பட்ட இடத்தில் பல வீடுகள் கொண்ட தெருவும், ஐந்து ஆலமரங்கள் தனித்த[illegible] இருக்கின்றன. இந்த இடத்தில் தா[illegible] பர்ணசாலை கட்டி சீதாதேவியோடு வனவாசத்தைக் கழித்தான் என்று சொல்கிருர்கள். அந்த இடத்தைப் பார்த்து விட்டு மீண்டும் நடந்து போய்க்கொண்டே இருந்தபொழுது ஆஞ்சநேயர் படத்தை வைத்து வாலிபர்கள் ஒரு பத்துப் பதினைந்து பேர் விதவிதமான உடற்பயிற்சி செய்து கொண்டிருந்தார்கள். ஆக இந்தப் பகுதிகளிலெல்லாம் உடலையும் உள்ளத்தையும் பக்குவப்படுத்துகின்ற பயிற்சிகள் நடைபெற்றுக்கொண்டிருப்பதைப் பார்க்க முடிந்தது.

செய்திகள்

நிகழ்பவை:

16-3-85 சனிக்கிழமையன்று சேலம் ஜில்லா மேச்சேரியில் சன்மார்க்கச் சங்கக் கட்டடத்திலும், 17—3—85 ஞாயிற்றுக்கிழமையன்று, சேலம் ஜில்லா ராசிபுரம் தெய்விக வாழ்க்கைச் சங்கத்திலும் ஸ்ரீமத் நித்தியானந்த சுவாமிகள் ஒருநாள் அந்தர்யோகம் நடாத்துவார்கள்.

ஏப்ரல் மாதம் 15-ஆம் தேதி திங்கட்கிழமையன்று சேலம் ஜில்லா, மேட்டூர் தாலுகா, சின்னத்தண்டா, ஸ்ரீ ராமகிருஷ்ண குருகுலப் பள்ளி ஆண்டு விழாவில் ஸ்ரீமத் நித்தியானந்த சுவாமிகள் கலந்துகொள்வார்கள்.

ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள் இயற்றிய நூல்கள்

திருவாசகம்	பிரசார விலை ரூ.	23-00
ஸ்ரீமத் பகவத்கீதை 15-ம் பதிப்பு	,, —	21-00
மஹாபாரதம்	,, —	8-00
இராமாயணம்	,, —	7-00
ஸ்ரீ தாயுமானசுவாமி பாடல்கள்	,, —	6-00
ஸ்ரீராமகிருஷ்ணர் உபதேச மஞ்ஜரி	,, —	6-50
தினசரி தியானம்	,, —	4-50
ஞானயோக விளக்கம்	—	15-00
ராஜயோக விளக்கம்	—	12-00
கர்மயோக விளக்கம்	—	10-00
பக்தியோக விளக்கம்	—	9-00
விவேகானந்த விவரணம்	—	7-50
விவேகானந்த உபநிஷதம்	—	7-00
பரமஹம்சரின் பெருமை	—	6-00
கடவுளின் வடிவங்கள்	—	6-00
ஸ்ரீ விவேகானந்தர் ஜீவிதம்	—	6-00
சந்தேகம் தெளிதல் பாகம்—1	—	5-50
சந்தேகம் தெளிதல் பாகம்—2	—	5-50
மாணவருக்கு ஒரு சொல்	—	4-50
சகோதரி நிவேதிதை	—	3-75
சுவாமி விவேகானந்தர்	—	3-50
ஸ்ரீ சாரதாதேவியாரது சரிதம்	—	3-00
அனுஷ்டான வேதாந்தம்	—	3-00
எதிர்கால இந்தியா	—	3-00
தேவரகசியம் (முதலிய கதைகள்)	—	3-00
தாயுமானவர் இயற்றிய		
கருணாகரக் கடவுள் விரிவுரை	—	3-50
ஞனந்தம்	,, —	3-00
யானந்த குரு	,, —	3-00
ஆனந்தமானபரம்	,, —	3-00
சுகவாரி	,, —	3-00
மௌனகுரு வணக்கம்	,, —	3-00
எங்கும்நிறைகின்றபொருள்	,, —	2-50
மலைவளர் காதலி	,, —	1-50
பரசிவ வணக்கம்	,, —	1-00
கண்ணன் என்னும் கடவுள்	—	2-50
அறம் வளர்த்த நம்பி	—	2-50
சந்நியாசி	—	2-50
விரதவீரர் பீஷ்மர் (நாடகம்)	—	2-50
ஹரிச்சந்திரன்	,, —	2-00
தவப்புதல்வர்கள்	,, —	2-00
பாதுகா பட்டாபிஷேகம்	,, —	1-75
நன்மக்களைப் பெறுதல்	—	1-75
விபீஷணன் சரணாகதி	,, —	1-50
பரமஹம்சர் பாமாலை	—	1-50
காயத்ரீ	—	1-50
மாணாக்கன்	—	1-25
செத்தவர்கள் நம்மோடுபேசுகிறார்களா?	—	1-25
சைவன் யார்?	—	1-25
*ஆலய வழிபாடு	—	1-25
*ஆத்ம சக்தி	—	1-25

*மனிதனது நிஜசொருபம்	—	1-25
*சிவதத்துவம்	—	1-25
இறைவணக்கம்	—	1-00
குழந்தைகளின் களிக்கூடம்	—	1-00
இராவண தத்துவம்	—	1-00
வாலி மோட்சம் (நாடகம்)	—	1-00
ஏகலைவ்யனின் குருபக்தி (நாடகம்)	—	1-00
தானவீரன் கர்ணன் (நாடகம்)	—	1-00
மார்க்கண்டேயன் (நாடகம்)	—	1-00
பிரஹ்லாதன் (நாடகம்)	—	1-00
தபோபலன் (நாடகம்)	—	1-00
பார்வதி, லக்ஷ்மி, சரஸ்வதி கர்வபங்கம்	,, —	1-00
இந்துமதமும் கிறிஸ்துவமதமும்	—	1-00
நோய்க்கு இடம் கொடேல்	—	1-00
*கணபதி	—	1-00
*சக்தி தத்துவம்	—	0-90
சூரியநாராயணன்	—	0-70
தெய்வீக மகிமைகள்	—	0-75
*முருகக்கடவுள்	—	0-75
வர்ணாச்ரம தர்மம்	—	0-70
தாயுமானவர் ஆலயத்தில் தத்துவ அமைப்பு	—	0-60
*விஷ்ணு தத்துவம்	—	0-50
கர்மகாண்டம் எது? ஞானகாண்டம் எது?		0-50
அருள் விருந்து (பௌண்ட் செட்)	—	10-00
அருள் விருந்து 1 to 25 ஒவ்வொன்றும்	—	0-30
விவேகானந்தரின் வீர கர்ஜனை	—	0-30
கந்தர் அநுபூதி	—	0-25
The Bhagavd Gita (12th Imp.)	—	30-00
Sri Lalithambika Sahasranama Stotram		15-00
The Indian National Education	—	10-00
Tirukkural (with plastic cover)	—	9-00
Ramakrishna lives Vedanta	—	8-00
Mahaveer Sri Hanuman	—	7-75
Man Making Message	—	7-00
Ramayana (with plastic cover)	—	7-00
Mahabharata ,,	—	6-00
Sri Bhagavad Gita (Small Size)	—	6-00
Sri Krishna-The Manifest Divinity	—	6-00
Daily Divine Digest (DELUXE)	—	6-00
Daily Divine Digest (Ordinary)	—	4-00
Facets of Brahman or The Hindu Gods	—	5-00
Siva Sahasranama Stotram	—	3-50
Sri Vishnu Sahasranama Stotram	—	3-50
Thus Speaks Tayumana Swamigal	—	3-50
*Introducing The Gita	—	2-00
Holy Bible—In the Light of Vedanta	—	1-50
Reminiscences of Master Mahashaya	—	1-50
The Nursery School	—	1-50
The Garland of Paraaparam	—	1-50
*Key to Higher Life	—	1-25
*The Student	—	1-25

* இக்குறியிட்ட தலைப்புகள் பெரிய புத்தகங்களில் அடங்கியுள்ளன.

ஸ்ரீ ராமகிருஷ்ணமடம் - ராமேஸ்வரம்

(திருப்பராய்த்துறை ஸ்ரீராமகிருஷ்ண தபோவனத்தின் கிளை)

30—3—85 சனிக்கிழமை

ஸ்ரீ ராம நவமி நன்னாளை முன்னிட்டு இவ்வாண்டு மார்ச்சு மாதம் 30ஆம் தேதி சனிக்கிழமை காலை 4-30 மணிமுதல் மாலை 7-30 மணிவரை ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள் தலைமையில் ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்தில் ஆண்டு விழா கீழ்க்கண்ட நிகழ்ச்சி முறைப்படி கொண்டாடப் பெறும்.

நிகழ்ச்சி முறை

காலை

4-30	திருப்பள்ளி எழுச்சி
6-00 — 8-00	ஆலயவழிபாடு
8-00 — 9-00	சிற்றுண்டி
9-00 — 11-00	பஜனை
11-00 — 12-00	ராமநாம சங்கீர்த்தனம், அர்ச்சனை, தீபாராதனை

மாலை

3-00 — 4-00	லக்ஷார்ச்சனை
4-00 — 5-00	ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள் தலைமையில் தக்க பேச்சாளர்களைக்கொண்டு பேச்சு
6-00 — 7-30	அந்தர்யோகம்

பாரத்வாஜ ஆச்ரமம்

சேரன்மகாதேவி, திருநெல்வேலி Dt.

1923ல் திரு. வ. வே. சுப்பிரமணிய ஐயர் அவர்கள் துவக்கிய இந்த ஆச்ரமம் 1970லிருந்து தபோவன நிர்வாகத்தில் இருந்து வருகிறது. ஏப்ரல் மாதம் 2ஆம் தேதி திரு. ஐயர் அவர்களின் பிறந்த நாள் ஆகும். அன்றைய தினம் இவ்வாச்ரமத்தின் ஆண்டு விழாவாக ஆண்டுதோறும் கொண்டாடி வருகிறோம். இவ்வாண்டு கீழ்க்கண்ட முறைப்படி இந்த ஆச்ரமத்தில் ஆண்டு விழாவும் ஸ்தாபகர் தினமும் கொண்டாடப் பெறும். விருப்பமுள்ள அன்பர்கள் இந்நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளலாம்.

நிகழ்ச்சி முறை

காலை

10 மணி முதல் 12 மணி வரை — பஜனை, ஐக்கிய வணக்கம், பூஜை, அர்ச்சனை

மாலை

3 மணி முதல் 5-30 மணி வரை — உபந்யாசம், அங்குள்ள குருகுல மாணாக்கர்களால் கலாநிகழ்ச்சிகள்.

இங்ஙனம்

சுவாமி சித்பவானந்த

Edited by SWAMI NITHYANANDA,
Printed & Published by Swami Sankarananda at Tapovanam Printing School. Tirupparaitturai, Tiruchi Dt.